அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 15 | ஆகஸ்ட் 2022 | திருவள்ளுவர் ஆண்டு 2053



# எல்லை தாண்டும் ஆதிக்கம்



வங்குரோத்து நிலையில் இலங்கை

இந்து சமுத்திர மேலாதிக்கம் யார் கையில்?

மகிழ்ச்சி

ஏக்கம்!



பொழில்



# மாறுமா நிலை?

கோத்தா மறுபடியும்
கொழும்புக்கு வருகிறாராம்..!
கொண்டாட ஒரு கூட்டம்
கொடி பிடிக்க ஒரு கூட்டம்
திண்டாட்டம் மட்டும்
தீரவில்லை எம் வாழ்வில்!!

வந்தவரை வரவேற்பர்..!
வசிப்பதற்கு என்று ஒரு
அரண்மனைகூட
அரச செலவிலே
கட்டப்படலாம்..!!

குற்றப் பத்திரிகை
தாக்கல் வருமா?
சிலருக்கு சந்தேகம்.
குற்றமா? கோத்தாவா?
கிலோ என்ன விலை?
காப்பர் ரணில் இருக்க
கோத்தாவுக்கென்ன பயம்?

குடிசைகூட இல்லாமல்
நாதியற்று
நடுத்தெருவில் நிற்கும்
நாம் இங்கே
கோபுரத்தில் குடியிருக்கும்
அவர்களெங்கே..?
நாட்டு நடப்பிலேனும்
நல்லது நடந்திருக்கா?
விலைகள் கொஞ்சமாய்
இறங்கித்தான் இருக்கிறது..
பயனென்ன?
பணத்தை ஈட்டுகின்ற
பாதைகள்தான்
இருண்டு போய்
இருக்கிறதே.!!

அரசு மாறினால்..
அனைத்துமே மாறிவிடும்.
அறிவிலியாய் நம்பிவிட்டோம்!
வீணான எண்ணத்தால்
விவசாயம் தனைத் தொலைத்து
வீதியிலே இறங்கி
விடியலுக்காய் கோசமிட்டோம்.!!

கண்ட பயன் என்ன?
புது அரசு வந்தது..
புதிதாய் சட்டங்கள் முளைத்தன..!
பக்கத்து வீட்டு பண்டார
பட்டப்பகலில்
காணாமல் போனதும்,
சில்வா சிறைப்பிடிக்கப்பட்டதும்,
கடத்தல்களும்,கைதுகளும்
சிறைகளும்,சித்திரவதைகளும்..
அச்சமூட்டும் நிகழ்வுகள்.
போனவர்
எப்போது திரும்ப வருவார்கள்?
தெரியவில்லை
களனிகங்கையிலே பிணங்கள்..
சூட்டுச் சத்தங்கள்.
மீண்டும் எதிர்ப்பு
ஊர்வலமா? - ஐயோ
நினைக்கவே நெஞ்சம்
நடுங்குது

ரணில் ஐயா
வென்றுவிட்டார்!
தடயமும் இல்லாமல்
தந்திரமாய் அழிக்கிறாரே!!
தமிழ் மக்களை அப்போ
என்னவெல்லாம் செய்திருப்பார்.?

சீனாவாம் ஜப்பானாம்
இந்தியா கூட ஒருதொகை
தருகுதாம்.!!
மேற்கு நாட்டினருடன்
பேசித் தீர்க்கிறாராம்

இவையெல்லாம் இருக்கட்டும்.
சோத்துக்கு என்ன வழி?
தொலைந்த தூக்கத்துடன்
நாங்கள் இங்கே.!!

மாத இதழ் | மணம்: 15
ஆகஸ்ட்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


- ஆசிரியர் கருத்து... 05
- வங்குரோத்து நிலையில்... 06
- இந்து சமுத்திர மேலாதிக்கம்... 09
- ஆரோக்கிய வாழ்வு... 12
- பொருளாதாரமும் (கவிதை) .... 14
- மார்தட்டும் மலையகம்... 15
- காத்திருப்பு!!! (கவிதை) .... 17
- மகிழ்ச்சி... 18
- தொழிலாளியும், கம்பனியும்... 20
- ஏக்கம் (கவிதை) ... 24
- பிடித்த கதை.... 26
- வங்கம் தந்த பாடம்... 27
- ஊடகங்களின் வளர்ச்சி... 31
- வலை (நெடுங்கதை)... 34




# திருக்குறள்

**குறள் 1028:**

"குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும்"

**விளக்க உரை:**

தன் வீட்டையும் நாட்டையும் மேன்மை அடையச் செய்து குடி உயர்வதற்கான செயல் செய்கின்றவர்க்கு உரிய காலம் என்று ஒன்று இல்லை, சோம்பல் கொண்டு தம் மானத்தைக் கருதுவாரானால் எல்லாம் கெட்டுப் போகும். அதனால் அவரவர் கால நேரம் பார்க்காமல் செயலில் இறங்க வேண்டும்.












நாட்டின் அரசியல் நிகழ்வுகளை அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். வாழ்த்துகள். குருந்தனூர் மலையில் இவ்வளவு விடயங்கள் அடங்கியிருக்கிறதா? எங்கள் இடத்தையே நாங்கள் இன்னமும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை.

**பமீலா பிரின்ஸ் (நியூயார்க்)**

கவிதைகள் நன்று. குறிப்பாக இதுவும் ஒரு கோடை, அற்புத அகிலம் மிகவும் பிடித்திருந்தது. மலையகப் பெண்கள் பற்றிய கட்டுரை அருமை. ஆனால், அவர்கள் நித்தமும் பிரச்சனைகளுக்குள்ளேயே வாழ்கின்றனர். அதை விரிவாக எழுதலாமே?

**றொபேட் (மூதூர்)**




சிறப்புக் குழந்தைகள் பற்றிய கட்டுரை நன்று. இப்படியான கட்டுரைகளை அடிக்கடி பிரசுரிப்பதன் மூலம் மக்கள் மனதில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பது எனது கருத்து. வங்கம் தந்த பாடம் கட்டுரைத் தொடரை தொடர்ந்து வாசிக்கிறேன். எங்களுக்கு இந்தக் காலத்தில் தேவைப்படும் நிறையத் தகவல்கள் இதில் இருக்கிறது. காலத்திற்கு ஏற்ற பதிவு.

**பொன்னீசன் (கனடா)**

சிறுகதை எனது மனதைத் தொட்டு விட்டது.

கதாசிரியருக்கு எனது வாழ்த்துகள். தொடர்ந்தும் எழுதுங்கள்.

உங்கள் எழுத்து நடை கவரும் வண்ணம் உள்ளது.

புத்தகத்தின் படங்கள் கதை சொல்கின்றன.

புத்தக ஒழுங்கமைப்பாளருக்கும் எங்கள் வாழ்த்துகள்.

**மணியரசன் குடும்பத்தினர் (ஒன்ராறியோ)**






அடடா! அருமையான சிறுகதை. அழகாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆசிரியரை மேலும் மேலும் எழுத ஊக்கப்படுத்துங்கள்.

இத்தனை வருடங்கள் கடந்தும் ஜூலைப் படுகொலைகள் மனதைப் பிழிவதைத் தவிர்க்க முடியவில்லை. கொழும்பில் நடப்பது தொடரும் என்று நான் நினைக்கவில்லை. பார்ப்போம்.

**வந்தனா பானுகோபன் (ஜேர்மனி)**




ஆசிரியர் கருத்து நன்கு ஆய்வுசெய்து எழுதப்பட்டிருக்கிறது.

கட்டுரைகள் சமகால நிலையை தெளிவாக எடுத்துச் சொல்வதுதனிச்சிறப்பு.

சிறுவர் மலர் ஒன்று சேர்க்கலாம் என்பது எனது ஆலோசனை.

வழமைபோல கருத்தாழம் மிக்க கதைகள். புத்தகம் மிகச் சிறப்பாக உள்ளது. வாழ்த்துகள்.

**நிஷா பிரபா (அயர்லாந்து)**

ஆவி கவிதையில் பேசியது வித்தியாசமாக இருந்தது.

கட்டுரைகள் சூப்பர். இடையிடை குட்டிக்கதைகள் அருமை.

மொத்தத்தில் புத்தகம் வழமை போல மிகவும் நன்று. சிறப்பு. மேலும் வளர வாழ்த்துகிறேன்.

**தேமதுரன் (கும்பகோணம்)**

வழமைபோல புத்தகம் அருமை. எங்கள் பகுதியில் பிரபல்யமாகி விட்டீர்கள்.இந்திய எழுத்தாளர்களின் தரத்தில் கதைகள் இருப்பதும் அவை வட்டார வழக்கில் இருப்பதும் தனிச் சிறப்பு. அடுத்த புத்தகத்திற்காக காத்திருக்கிறோம்.

**நிரந்தரி நித்திலன் (கன்பெரா, அவுஸ்திரேலியா**

# எல்லை தாண்டும் ஆதிக்கம்

## ஆசிரியர் பக்கம்

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை பலப் படுத்தி வந்த இந்தியா இப்போது இந்தோ - பசுபிக் பிராந்திய நலனில் தனது நிலையை பலமாக்க எல்லா முயற்சிகளையும் எடுக்கிறது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்திலிருக்கும் இலங்கை யார் பக்கம் சரிந்தாலும் அது தனது பாதுகாப்பிற்கும் பொருளாதார நலனுக்கும் அச்சுறுத்தலாகி விடும் என்பதால் இலங்கையில் தனக்குரிய பிடியை எப்போதும் பேணி வந்திருக் கிறது இந்தியா. இதெல்லாம் நன்கு தெரிந்தும், தமிழ் இளை ஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் தளமும் வளமும் கொடுத்து பேணி வந்தது தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுத் தரவே என்று இன்னும் மக்களின் காதில் பூச்சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள் எமது தமிழ் அரசியல்வாதிகள். இலங்கை சிங்கள, பௌத்த ஆட்சிகொண்ட ஒரு ஒற்றையாட்சி நாடு என்பதில் இந்தியா வுக்கு எந்தவொரு மாற்றுக் கருத்தும் இல்லை. இது இரண்டாக உடைந்து தமிழர் தாயகம் தனியாகப் பிரிந்து போவதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. அது இந்தியப் பாதுகாப்பிற்கு ஒரு அச்சுறுத்தல் என்று பார்க்கிறது அது. 2009 இல், ஊடுருவ லுக்கு இடங்கொடாத புலிகளை அழிப்பது என்ற பெயரில், தமிழினப் படுகொலையில் இந்தியா பெரும்பங்கு வகித்ததை மறக்க முடியுமா?

சுதந்திர இலங்கைக்கு யாருடனும் கூட்டு வைக்கும் உரிமை இருக்கிறது. அது தனக்குப் பாதகமாக அமையும்போதெல்லாம் இலங்கையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க இந்தியா கையிலெ டுக்கும் ஆயுதம்தான் தமிழர் பிரச்சனை. பல தசாப்தங்களாகவே தன் உளவு நிறுவனமான 'றோ' (RAW) முகவர்களை தமிழர் தாயகத்தினுள் இறக்கி தன்னை ஸ்திரப்படுத்தும் நடவடிக் கைகளில் இந்தியா இறங்கியிருப்பது பலரும் அறிந்ததுதான். புலிகள் காலத்தில் எந்த அந்நிய சக்திகளும் தமிழர் பிரதேசங் களில் அத்துமீற முடியாமல் இருந்ததும் பல 'றோ' முகவர்கள் அம்பலப்படுத்தப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டதும் ஞாபகமி ருக்கும். இப்போது அப்படியா? போர் மௌனிக்கப்பட்டபின், கேட்க யாருமற்ற நிலையில் தமிழர் தத்தளிப்பதற்கு அந்நிய நாடுகளுக்கு எடுபிடிகளாக இருக்கும் எமது தமிழ் அரசியல்வா திகளும் ஒரு காரணம். 'ஆற்று நீர்தானே.. அம்மா குடி! அய்யா குடி!' என்று எங்கள் அனுமதி இல்லாமலேயே அந்நியதலையீ டுகள், குறிப்பாக இந்தியா, எங்கள் நிலத்தில் தொடர்கின்றன.

இளைஞர் அமைப்புகள், சமய அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள் வியாபாரிகள். என்று பல்வேறு வழிகளில் இந்திய உளவாளிகள் எம்மண்ணில் தொடர்ந்தும் ஊடுருவிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.சாதி, மதம், வர்க்கம் என்று பிரிவினை யைத் தூண்டுவது மட்டுமல்லாமல் மறுபடியும் மக்கள் தமக்குத் தீர்வு வேண்டும் என்று ஒன்றிணையாமலும் பார்த்துக் கொள் கிறார்கள் இவர்கள். மக்களை ஏதேதோ பிரச்சனைகளுக்குள் தள்ளி, அவர்களுக்கு சிந்திக்க அவகாசம் கொடுக்காமல், இறுதியில் இந்தியா வந்துதான் எமக்கு நல்ல தீர்வை வாங்கித் தரும் என்ற மனப்பாங்கை மக்களிடையே ஸ்திரப்படுத்தும் முயற்சியே இது.அதில் பாதி வெற்றியும் பெற்றுவிட்டார்கள். ஏற்கனவே, எமது அரசியல்வாதிகள் துணையுடன் சம்பூரில் 500 ஏக்கர், வவுனியா வடக்கில் 300 ஏக்கர் நிலப்பரப்புகள் இந்தி யாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டன. மக்களின் கருத் துக்கு எந்த மதிப்பும் அளிக்கப்படாமல் மன்னாரில் காற்றாலை அமைக்கும் திட்டத்தில் இறங்கியுள்ளது இந்திய அதானி நிறுவ னம். யாழ் மாவட்டத்தைச் சூழவுள்ள நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவில் தன்னிச்சையாக மின் உற்பத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துகிறது இந்தியா.

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வாழ்விழந்து நிற்கிறார் கள் நமது மீனவர்கள். இந்தியா கண்டுகொள்ளவேயில்லை. கடற்தொழிலமைச்சர் டக்ளஸ் மீனவர்களுக்கு எந்தத் தீர்வும் காணாமல் சம்பந்தமேயில்லாமல் யாழ் பல்கலைக்கழக கட் டடம் திறந்து வைக்கிறார். கோவில்கள் இருக்கும் இடங்கள் அத்தனையிலும்,குறிப்பாக உயர்ந்த நிலமட்ட, மலைப் பகு திகளில் விகாரைகள்தான் இருந்தன என்றுநிறுவுவதற்கு பகீரதப் பிரயத்தனப் படுகிறது இலங்கை தொல்பொருள் ஆய்வு மையம். இதை மௌனமாக வேடிக்கை பார்க்கிறது இந்தியா. இந்த நிலையில், யாழ் பல்கலைக் கழகத்தில் புதிதாக உருவாக் கப்பட்ட 'இந்து கற்கைப் பீடம்' 50 மாணவர்களை உள்வாங் கியிருப்பதன் பின்னணியில் இந்தியக் கரங்கள் உள்ளனவா? இவர்களுக்கு பின்னாளில் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும் சாத்தியம் உண்டா? என்ற கேள்வி எழுகிறது.

இப்போது, 'இந்தி' படித்தால் இந்திய பல்கலைக்கழகமான IIT யில் புலமைப்பரிசிலில் படிக்க முடியும் என்ற புனைகதையு டன் பாடசாலை மாணவர்களுக்கு இந்தி கற்கை வகுப்புகளை ஆரம்பித்துள்ளது பிரபல யாழ் இந்துக் கல்லூரி.தமிழ்நாட் டில் இந்தி எதிர்ப்பு வலுவாக இருக்கும் நிலையில், யாழில் இந்தியா? IIT ஒரு சர்வதேச தரம் வாய்ந்த பல்கலைக்கழகம் என்பதிலும் அது உலகின் மதிப்புமிக்க நிறுவனர்களில் பலரை உருவாக்கியிருக்கிறது என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை. அண்மையில் கூட 7 நாடுகளில் தனது பல்கலைக்கழகங் களை அமைக்க அங்கீகாரம் பெற்றுள்ளது IIT. அதற்கும் இந்தி கற்கைக்கும் என்ன சம்பந்தம்? இந்தி என்பது தொழில் முறைக்குரிய ஒரு மொழி அல்ல. (not a professional language). பிரெஞ்ச், ஸ்பானிஷ், லத்தீன், ஜப்பனீஸ். என்று வேறு மொழிகளைப் படிக்கும் போது உயர்கல்வி,அந்தந்த நாடுகளில் வேலை செய்யும் வாய்ப்புகள் என்று பயன் உண்டு. இந்தியால் என்ன பயன்? மொழியறிவிற்காக வேண் டுமானால் படிக்கலாம். ஆங்கில அறிவும், உயர்தரத்தில் நல்ல சித்தியும் இருந்தால், யார் வேண்டுமானாலும் IITயில் படிக்க விண்ணப்பிக்கலாம் என்பதுதான் உண்மை. எங்களுடைய கல்விமான்களுக்கும் இது தெரியும். இவர்களும் விலை போய் விட்டார்களா என்ன?தமிழ்ப் பிரதேசத்துக்கு, கடல்தாண்டி இந்தி எடுத்து வரப்பட்டதை ஒரு கற்கைநெறிதானே என்று சாதாரணமாக எடுத்துவிட முடியாது.

ஆழமாகப் பார்த்தால், அடுத்த தலைமுறையை உளவியல் ரீதியாக கட்டுப்படுத்தும் இந்திய முயற்சியாகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது.

மொத்தத்தில், நீண்டகால நோக்கில், இந்தோ - பசுபிக் ஆதிக் கப் பனிப்போரின் அரசியலுக்கு ஏற்றவாறு, எங்கள் இளைய சமுதாயம் இப்போதே தயார்படுத்தப் படுகிறதா என்ற அச்சம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

கனலி




# வங்குரோத்து நிலையில் இலங்கை



பல போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களின் பின் அதிகாரத்தில் இருந்தவர்கள் மாற்றப்பட்ட பின்னரும்இலங்கை வாழ் மக்களின் வாழ்வில் மாற்றம் ஏதும் நிகழவில்லை. இன்னமும்,கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி, நாளாந்த வாழ்வை வாழ முடியாமல் தத்தளிக்கிறார்கள் இலங்கை மக்கள். இந்த நெருக்கடிக்கு பணவீக்கம், அந்நிய செலாவணி கையிருப்பு படுவேகமாகச் சரிந்து செல்வது போன்றனதான் காரணங்கள் என்று மக்களால் அடிக்கடி பேசப்பட்டாலும், அந்நிய செலாவணி, பணவீக்கம் என்றால் என்ன?, அவை எப்படி உருவாக்கப்பட்டன? என்பன பற்றி அறிந்து கொள்ளும் போதுதான் இலங்கையின் நெருக்கடி நிலையைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியும்.

## அந்நிய செலாவணி (Forex):

அயல் நாடுகளிடையே வணிகப் பரிமாற்றத்தின்போது ஏற்படும் நாணய மதிப்பீடே அந்நியச் செலாவணி எனப்படுகிறது. இந்த நாணய மதிப்பீடு ஒவ்வொரு நாளும் மாறிக் கொண்டிருக்கும். இது நிலையாக இருப்பதில்லை. உலகத்தின் போக்குக்கும் அன்றாடம் நடைபெறும் மாற்றங்களுக்கும் ஏற்ப நாணயத்தின்



பெறுமதி கூடலாம் அல்லது குறையலாம். ரூபாவின் மதிப்புக் குறை வதானது ஒரு தனி நபரைப் பாதிப்பதை விட ஒரு நாட்டின் வணிகப் பரிவர்த்தனையில் மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

பணத்தின் மதிப்பீட்டில் அதிக ஏற்ற இறக்கம் ஏற்படும்போது, வெளிநாட்டு பணச்சந்தையில் தலையீடு செய்யவும்,வெளிநாட்டுக் கடன்களைச் சமாளிக்கவும், எதிர்பாராத வகையில் ஒரு நாட்டின் முதலீட்டாளர்கள் வெளியேறிவிட்டால் அதைச் சமாளிக்கவும் ஒரு நாட்டிற்கு அந்நிய செலாவணி கையிருப்பு அவசியம். இதனால் தான் உலகநாடுகள் தங்கள் கையிருப்பை அதிகரிக்க எல்லாவித மான முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர். அந்நிய செலாவணி கையிருப்பை வைத்துத்தான் ஒரு நாட்டின் பொருளாதார வலிமை எடைபோடப் படுகிறது. உங்களுக்குத் தெரியுமா? உலகிலேயே அந் நிய செலாவணி கையிருப்பு அதிகமுள்ள நாடு சீனா. இதனால்தான் வறிய நாடுகளைத் தனது கடன் பொறிக்குள் சிக்கவைத்து அந்த நாடுகளில் கால் பதிக்க சீனாவால் முடிகிறது.

அந்நிய செலாவணி சந்தை என்பது மிகப்பெரிய உலகளாவிய சந்தையாகும். இங்கு ஒவ்வொரு நாளும் சுமார் ஐந்து ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பெறுமானம் மிக்க நாணயம் பரிமாற்றம் செய்யப் படுகிறது. இது ஒரு மையப்படுத்தப்பட்ட சந்தையாக இல்லாமல் ‘டிஜிற்றல்’ சந்தையாக இருப்பதே இதன் சிறப்பு. நியூயோர்க், லண்டன், டோக்கியோ, சிங்கப்பூர், சிட்னி, ஹங்காங் மற்றும் பிராங்பேட் போன்ற உலகளாவிய நிதி மையங்களில் பாரிய அந்நியச் செலாவணி சந்தைகள் இயங்குகின்றன. இங்கு பல தேசிய நாணயங்கள் வர்த்தகம் செய்யப் படுகின்றன. இந்தச் சந்தை தரகர்கள், தனிப்பட்ட வர்த்தகர் கள்,நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் மின்னணு வலையமைப்பாக இருக்கிறது. அந்நியச் செலாவணி வர்த்தகமானது பெரும்பாலும் அமெரிக்க டாலர்களில் (USD ) தான் நடைபெறும். ஒரு நாடு தான் வைத்திருக்கும் அந்நியச் செலாவணி கையிருப்பை வேறு எதிலும் முதலீடு செய்ய முடியாது. அதனை அயல்நாட்டு வர்த்தகப் பரிவர்த் தனை தவிர வேறு எந்த வழியிலும் உபயோகப்படுத்தாமல் வைத்தி ருக்க வேண்டியதுதான். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மத்திய வங்கி தனது நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்புகளை டாலர்களாகவும் தங்கம், வைரம், வைடூரியம் போன்றனவாகவும் பாதுகாப்பது வழமை. ஒரு நாட்டின் கையிருப்பு குறைவடையும்போது, பொருட்களை வாங்கவியலாத நிலை ஏற்பட்டு நாட்டின் பணவீக்கம் அதிகரிக்கும்.

இந்தக் கையிருப்புத்தான் இலங்கையில் இப்போது பூச்சியத்தை நோக்கிப் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இதனால் வெளியில் இருந்து எந்தப் பொருட்களையும் இறக்குமதி செய்ய இயலாத நிலையில் பிற நாடுகளிடம் கடன் கேட்டு கையேந்தி நிற் கிறது இலங்கை.

## பணவீக்கம் (Inflation):

பணவீக்கம் என்றால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகளின் பொதுவான நிலை அதிகரிப்பது. இதனால் அந்த நாட்டு நாணயத்தின் திறன் குறைவடையும். விலையுயர்வுக்கு ஏற்ப வருமானம் அதிகரிக்கவில்லை என்றால் விலைவாசிக்கு எதிராக பொருட்களை வாங்கும் திறன் குறையும். இதனால் பொருளாதார மந்தநிலை உருவாகும். பணவீக்கம் இரண்டு வழிகளில் ஏற்படலாம்.

1.தேவைக்குக் குறைவாக ஒரு பொருள் உற்பத்தியாகும்போது அதை வாங்குவதில் போட்டி ஏற்படும். இதனால் அதன் விலை அதி கரிக்கும். அதாவது, முன்பு ஒரு பொருளை என்ன விலை கொடுத்து வாங்கினோமோ அதே விலைக்கு இப்போது அந்தப் பொருளை விலை கொடுத்து வாங்க முடியாது. அதை வாங்க மேலதிக பணம் தேவைப்படும். அதாவது பணத்தின் மதிப்பு அங்கு குறைந்து போகும்.

> **பல்லாயிரம் மக்கள் வீதியில் இறங்கிப் போராடி ராஜபக்ச குடும்பத்தினரை பதவிக்கட்டில் இருந்து இறக்கியிருக்கிறார்கள். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அசையும், அசையாச் சொத்துக்களாக தங்களுடைய பெயரிலும் பினாமிகளின் பெயரிலுமாக ராஜபக்ச குடும்பத்தினர் பதுக்கியிருக்கும் கோடிக்கணக்கான சொத்துக்கள் பற்றி பத்திரிகையினூடு அண்மையில் வெளிப்பட்ட விபரம்அனைவரும் அறிந்ததே. இப்படி இன்னும் எத்தனை வெளிவராத விபரங்கள் இருக்கும்? இது ராஜபக்ச குடும்பத்தினரினது மட்டும்தான்.**






2.பிரச்சனைகளைச் சமாளிக்க மத்திய வங்கி மேலதிகமாக பணத்தை அச்சிட்டு புழக்கத்தில் விடுவது. எந்த ஒரு பொருளும் தேவைக்கதிகமாக உற்பத்தியாகும்போது அதன் விலை வீழ்ச்சியடையும். இவ்வாறுதான் தேவைக்கதிகமான பணம் புழக்கத்தில் வரும்போது அதன் பெறுமதி குறைந்து பணவீக்கம் ஏற்படும். வெனிசுவெலா நாடு அதிகமாக அச்சிடப்பட்ட பணத்தால் வங்குரோத்து நிலையை அடைந்தது ஞாபகமிருக்கலாம்.

நுகர்வோர் விலைக்குறியீட்டின் வீக்கத்தை அளவிடுவதன் மூலம் ஒரு நாட்டின் பணவீக்கம் அளவிடப்படுகிறது. பணவீக்கம் மூன்று வகைப்படும்.

**1.மிதமான பணவீக்கம் -இது பணத்தின் பெறுமதி சீராகக் குறைவடைவதைக் குறிக்கும். 9% இற்கும் குறைவாகவே இது இருக்கும்.**
**2.வேகமான பணவீக்கம் - இரண்டிலிருந்து மூன்று இலக்கங்கள் வரை சடுதியாக பணத்தின் பெறுமதி குறையும்.**
**3.உயர் பணவீக்கம் -பணத்தின் பெறுமதி பல இலக்கங்களுக்கு கட்டுக்கடங்காமல் குறைவடைவது.**

நாட்டில் பற்றாக்குறை நிலவும்போது அதை சமாளிக்கும் நோக்கில் திட்டமிட்டு அளவுக்கதிகமாக பணத்தை அச்சிடுவது, தொழிலாளர்களின் திறமை அதிகரிப்பால் அவர்களின் ஊதியம் அதிகரித்து அதனால் எழும் பணவீக்கம், தொழில் முனைவோர் தமது இலாபத்தை அதிகரிக்க ஏற்படுத்தும் பணவீக்கம், போர்க்கால செலவுகளால் ஏற்படும் பணவீக்கம், போருக்குப் பிந்திய காலத்தில் நாட்டைப் புனரமைக்கும் செலவினத்தால் விளையும் பணவீக்கம், கள்ளச்சந்தை, அதனால் வரும் கருப்புப் பணம், ஊழல், முறையற்ற சொத்துக்குவிப்பு இவற்றை மறைத்து ஈடுசெய்ய அரசியல்வாதிகளும் அவர்களின் கைப்பாவைகளான சில அதிகாரிகளும் மக்கள் மேல் வலிந்து திணிக்கும் பணவீக்கம் என்று பல காரணிகளால் பணவீக்கம் ஏற்படுத்தப்பட்டு அதன் அழுத்தம் மக்களைச் சென்றடைகிறது.

**பணவீக்கத்தின் விளைவுகள்:**

1. **வறுமையான நிலைக்கு மக்கள் தள்ளப்படுதல்.**
2. **பொருட்களுக்கு ஏற்படும் தட்டுப்பாடு.**
3. **தொழில் வாய்ப்புகள் அருகிப் போதல்.**
4. **பொருட்களின் சடுதியான விலையேற்றம்.**
5. **நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சி.**
6. **சேவைகள் படிப்படியாக குறைக்கப்படுதல்.**
7. **அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையும் பிரச்சனைகளைத் தீர்க்கவியலாத நிலையும் எழுதல்.**

என்று அத்தனை சுமைகளும் மக்களின்தலைமீது இறக்கி வைக்கப்படுகின்றன. மக்கள் பட்டினியால் இறக்க நேரிடுகிறது. எந்தவொரு அரசியல்வாதி குடும்பமோ அல்லது இவ்வாறு முறையற்று சொத்துச்சேர்த்த பெரிய மனிதர்கள் குடும்பத்தினரோ பட்டினியால் வாடியதாகவோ அல்லது பற்றாக்குறையால் தவித்ததாகவோ நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

பல்லாயிரம் மக்கள் வீதியில் இறங்கிப் போராடி ராஜபக்ச குடும்பத்தினரை பதவிக்கட்டில் இருந்து இறக்கியிருக்கிறார்கள். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அசையும், அசையாச் சொத்துக்களாக தங்களுடைய பெயரிலும் பினாமிகளின் பெயரிலுமாக ராஜபக்ச குடும்பத்தினர் பதுக்கியிருக்கும் கோடிக்கணக்கான சொத்துக்கள் பற்றிபத்திரிகையினூடு அண்மையில் வெளிப்பட்ட விபரம் அனைவரும் அறிந்ததே.

இப்படி இன்னும் எத்தனை வெளிவராத விபரங்கள் இருக்கும்? இது ராஜபக்ச குடும்பத்தினரினது மட்டும்தான். அப்படியானால் மற்றைய அரசியல்வாதிகள், பெரும்புள்ளிகளிடம் பதுக்கப்பட்டிருக்கும் சொத்து? இவை எல்லாமே மக்களுடையவை. இன்று மக்கள் ஒருநேரம்கூட வயிறாரச் சாப்பிட முடியாததற்குக் காரணமானவர்கள் இத்தகைய அரசியல்வாதிகளும் பெரிய மனிதர்களும்தான். இவர்கள் சுருட்டிய சொத்துக்களை அரச மயப்படுத்தினாலே நாட்டின் பிரச்சனை கணிசமானளவு தீர்ந்துவிடும்.

இன்னமும் நாட்டின் பொருளாதாரச் சிக்கலைச் சீர்திருத்துவதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் அரசு எடுத்ததாகத் தெரியவில்லை. தமிழ் மக்களின் நியாயமான பிரச்சனையைத் தீர்ப்பதை அவர்கள் கருத்திலேயே எடுக்கவில்லை.உலக நாடுகளிடம் கையேந்துவதில் மட்டும் கவனமாக இருக்கிறார்கள். புலம்பெயர் தமிழர்களையும் அழைத்து, எல்லோரும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வாருங்கள் என்றுவேண்டுகோள் விடுப்பது, பேச்சுவார்த்தை நடத்துவது எல்லாம் வேறெதற்காகவும் இல்லை. தமிழ் மக்களின் போராட்டங்கள் உலக நாடுகளின் கடன் வழங்கலுக்கு இடையூறாக வந்துவிடக்கூடாது என்பதற்காகவே.

இப்படிப்பட்ட அரசியல்வாதிகளை அரசுக்கட்டில் வைத்திருக்கும் வரை மக்கள் நிம்மதியாக வாழ்வது என்பது கேள்விக்குறிதான்.

பாரி



# இந்து சமுத்திர மேலாதிக்கம் யார் கையில்?

சீனாவின் நடவடிக்கைகள் மீண்டும் ஒருமுறை இந்தியாவின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கின்றன. இந்தியா தெரிவித்த விசனக் குரல்களையும் கண்டனங்களையும் அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி, அம்பாந்தோட்ட துறைமுகத்தில் தரிக்க 'யுவான் வங் 5' என்ற சீனக்கப்பலுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார் திருரணில் விக்கிரமசிங்க அவர்கள். வாங்கிய கடனை மீளச் செலுத்தவியலாத நிலையில், அம்பாந்தோட்ட துறைமுகம் ஏற்கனவே 99 வருட கால குத்தகைக்கு சீனாவிடம் கையளிக்கப்பட்ட விபரம் யாவரும் அறிந்ததே.

சீனாவின் பொறுப்பில் இருக்கும் ஒரு துறைமுகத்திற்கு சீனக் கப்பல் வருவதை ஏன் இந்த நாடுகள் எதிர்க்க வேண்டும் என்ற கேள்வி எழும். 'ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளுக்கான கப்பல்' என்று



சொல்லப்பட்டாலும் 'யுவான் வங் 5' ஒரு உளவுக் கப்பல் என்கிறது ராய்ட்டர்ஸ். இந்த செய்தி நிறுவனத்தின்படி, புதிய தலைமுறையைச் சேர்ந்த ஒரு விண்வெளி கண்காணிப்புக் கப்பல் இது. செயற்கைக் கோள்கள், ராக்கெட்டுகள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் என்பனவற்றை துல்லியமாகக் கண்காணிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அதி நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட ஒரு உளவுக் கப்பல். வெளியே ஆய்வு வேலைகளும் இரகசியமாக உளவு வேலையும் என்று இரு வேலைகளைச் செய்கிறது இது.

சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் மூலோபாய ஆதரவுப் படை [PLA] யின் கட்டுப்பாட்டின் கீழ் இக்கப்பல் இருப்பதாக பென்ரகன் தெரிவித்துள்ளது. PLAவின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சீன ஏவுகணைப் பிரிவு, விண்வெளிப் பிரிவு என்பனவற்றிற்கும் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் இராணுவக் கட்டமைப்புக்கும் கீழ் இது இயங்குவதாக இன்னுமொரு செய்தி தெரிவிக்கிறது. அதே சமயம் கப்பலில் PLA கொமாண்டோக்களும் பொதுமக்களும் இணைந்து வேலை செய்வதாக ஏற்கெனவே வெளிவந்த சீன செய்தித் தகவல் ஒன்று தெரிவிப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்குசெல்லும் வழியிலும், அங்கு தரித்து நிற்கும் நேரத்திலும் இந்தியாவின் கேந்திர மையங்களை சீனக் கண்காணிப்பு அமைப்புகள் உளவு பார்க்கும் சாத்தியம் இருப்பதாக இந்திய NDTV செய்தி நிறுவனம் ஏற்கனவே தெரிவித்திருந்தது. அவர்களின் அச்சத்திலும் ஒரு நியாயம் இருக்கிறது. கப்பல் 750 கிலோ மீற்றர் சுற்றளவை தனது ரேடார் வளையத்தினுள் வைத்துக் கண்காணிக்க வல்லது. தற்போது தரித்து நிற்கும் இடத்திலிருந்து பார்த்தால், கேரளாவின் அநேக கேந்திர மையங்கள், தமிழ்நாடு, ஆந்திராவின் முக்கிய நிலைகள் என்பன இந்த வளையத்தினுள்



# இந்து சமுத்திர மேலாதிக்கம் யார் கையில்?

அடங்குகின்றன. எரிபொருளுக்காக ஆளை யாள் அடித்துக் கொள்ளும், பட்டினியால் மக்கள் இறக்கும் ஒரு நாட்டில், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களை நிரப்புவதற்காகவே கப்பல் தரித்து நிற்கிறது என்ற இலங்கை அரசின் அபத்தமான காரணம் நம்பக்கூடியதாகவா இருக் கிறது?

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தை முழுதாக தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க, திட்டமிட்டு செயற்படும் சீனா, மேற்குலகிற்கு, குறிப்பாக அமெரிக்காவிற்கு ஒரு தலைவலிதான். ஐரோப் பிய – ஆசிய மிகமுக்கிய வழித்தடத்தை கண்கா ணிக்கவே கப்பல் இலங்கை வந்துள்ளது என்பது அமெரிக்காவின் குற்றச்சாட்டு. ஏற்கனவே, சீன – தைவான் பிரச்சனையில், சீனக் கட்டுப்பாட் டின் கீழ் தைவான் மீண்டும் முழுதாக வந்தால், குவாம் மற்றும் ஹவாயிலுள்ள தனது இராணுவத் தளங்களுக்கு ஆபத்து என்று அச்சப்படுகிறது அமெரிக்கா.

அது மட்டுமல்லாமல், உலகம் முழுவதற்குமான கணணிகள், கைபேசிகள், கடிகாரங்கள், 'கேம் கொன்சோல்கள்' போன்ற எல்லா டிஜிற்றல் கரு விகளுக்குமான 65% ஆன 'சிப்' இனைத் தயாரி த்து விற்பது தைவான்தான். உலகச் சந்தையின் பாதியை தைவான் தன் வசம் வைத்திருக்கிறது. 2021 இல் மட்டும் சுமார் 100 பில்லியன் அமெ ரிக்க டாலர் அளவுக்கு தைவான் 'சிப்' வர்த்தகம் இருந்திருக்கிறது. தைவான் சீனாவிடம் போய் விட்டால் கிட்டத்தட்ட டிஜிற்றல் மயப்பட்டி ருக்கும் முழு உலகும் சீனாவை நம்பியிருக்க வேண்டி வரும். இது மேற்குலகிற்கு ஒரு பெரிய பிரச்சனை. அவை சீனாவை உன்னிப்பாக அவ தானிக்கின்றன. அண்மையில் சீன எதிர்ப்பையும் மீறி அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தைவான் போயிருந்தார். சீனாவிற்கு எதிராக தைவானுக்கு அமெரிக்கா ஆயுத தளபா டங்களை வழங்கி உதவுவதன் பின்னணியும் இதுதான்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவும் இந்தியாவும் வல்லரசு நிலையில் இருக்கின்றன. இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஒரு அச்சுறுத்த லாக சீனா இருப்பதாக இந்தியா கருதுகிறது. இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களைக் காக்க டெல்லி எந்த எல்லை வரையும் போகும் என்று இந்திய வெளியுறவு அமைச்சு கடந்த மாதம் தெரிவித்திருந்தது ஞாபகமிருக்கும். பல ஆண்டுகளாக, இந்தியப் பெருங்கடலின் வணிகக் கப்பற் பாதையை இந் தியா, இலங்கை இரண்டுமே இணைந்து கண்கா ணித்து வந்தன. இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர நிலையில் அமைந்திருக்கும் இலங்கை



கடந்த இரு தசாப்தங்களாகத்தான் சீனாவுடன் சற்று நெருக்கமான உறவைப் பேணி வருகிறது. அண்டை நாடான இந்தியாவிற்கு இது ஒரு பாது காப்பு அச்சுறுத்தலாக இருந்தபோதும், இலங்கை விவகாரங்களில் இருந்து இந்தியாவால் தள்ளி நிற்க முடியாது. இரு நாடுகளும் தன்னிடமி ருந்து விலகிப் போகாமலும் முரண்படாமலும் ஒரு வழுவலான உறவை இந்தியாவுடனும் சீனாவுடனும் பேணி வந்திருக்கிறது இலங்கை.

ஆனாலும், சமீபகாலமாக, இலங்கை கடுமை யான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்தபோதும் இந்தியாவைத் தவிர வேறெந்த நாடும் உதவ முன்வரவில்லை. எரிபொருள், சமையல்வாயு, மருந்துகள் என்று வாங்குவதற்காக கோடிக்கணக்கில் கடனுதவியும் பொருளுதவியும் செய்தது இந்தியா. அன்பளிப்பாக பொருட்களையும் அனுப்பி வைத் தது. சீனக் கப்பல் வருவதற்கு ஓரிரு நாட்களின் முன்புதான் கடற் கண் காணிப்பிற்கென ஒரு டோனியர் 228 ரக விமானத்தையும் இந்தியா இலங்கைக்கு வழங்கியிருந்தது. 'இந்திய இலங்கை கடல்களைக் கண் காணிக்கும் இரு நாடுகளின் கூட்டு முயற்சியின் ஆரம்பம்' என்று அந்தக் கையளிப்பு விழாவில் பெருமைபடப் பேசியிருந்தார் ரணில். உடனேயே சீன உளவுக் கப்பலுக்கும் அனுமதி கொடுக்கப்பட்டு விட்டதானது இந் தியாவுக்கு விசனத்தை ஏற்படுத்தியி ருக்கிறது. இலங்கை மீண்டும் தனது முதுகிற் குத்திவிட்டதாகக் கருதுகி றது இந்தியா. இந்து சமுத்திரப் பிராந் தியத்தில் இராசதந்திர ரீதியாக நுழைய எடுக்கும் சீன முயற்சி இதுதான் முதற் தடவையல்ல. 2014 இல்

> **இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவும் இந்தியாவும் வல்லரசு நிலையில் இருக்கின்றன. இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஒரு அச்சுறுத்தலாக சீனா இருப்பதாக இந்தியா கருதுகிறது. இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களைக் காக்க டெல்லி எந்த எல்லை வரையும் போகும் என்று இந்திய வெளியுறவு அமைச்சு கடந்த மாதம் தெரிவித்திருந்தது ஞாபகமிருக்கும்.**

# இந்து சமுத்திர மேலாதிக்கம் யார் கையில்?

ராஜபக்சேக்கள் ஆட்சியில் இருந்தபோது, இரு சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்து சர்ச்சையைக் கிளப்பின. பின்னர், 2017 இல் மீண்டும் ஒரு நீர்மூழ்கிக் கப்பல் உள்நுழைய அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அப்போது இதே ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்தார். ஆனால், இந்தத் தடவை அனுமதி கொடுத்ததும் அதே ரணில் தான்.

அண்மையில் நடந்த பதவிப் போட்டியின் போது, இந்தியா சஜித் பிரேமதாசவின் பக்கம் நின்றது. இதை மனதில் வைத்து, ரணில் தனது குள்ளநரி வேலையினூடாக இந்தியாவிற்கு பயம் காட்டியதாகவும் இச்சம்பவத்தை எடுத்துக் கொள்ளலாமோ? இலங்கை தன்னுடைய தனிப்பட்ட முடிவுகளை எடுக்கக்கூடிய சுதந்திர நாடாக இருந்தபோதும், உளவுக் கப்பலை அனுமதித்ததானது இந்தியாவுக்கு ஒரு அச்சுறுத்தல் தான் என்கிறார் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர். புலனாய்வு அறிக்கைகளின்படி, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளுக்காக சீனா மூன்று இடங்களைத் தேர்வு செய்திருக்கிறது. அம்பாந்தோட்ட துறைமுகம், கம்போடிய துறைமுகம், மியான்மார் சிட்வே துறைமுகம் என்பனவே அவை. கப்பலில் வருகையுடன் புலனாய்வுத் தகவலையும் ஒப்பிட்டு இந்தியா ஐயுறுவது இயற்கையே.

நெருக்கடிகளுக்கு மத்தியில் அமைந்த புதிய அரசாங்கம் இந்தியாவையும் சீனாவையும் எப்படிக் கையாளப்போகிறது என்பதை உலக நாடுகள் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டு



இருக்கின்றன. இந்த முக்கோண நெருக்கடியில் இலங்கை யார் பக்கம் சரியும் என்ற அரசியல் ஆரூடங்கள் எழுந்துகொண்டு இருக்கின்றன. வருங்காலத்தில் இந்திய – இலங்கை உறவில் விரிசல் விழுந்து விடுமா என்று யாரும் அஞ்ச வேண்டியதில்லை. இந்தியா கண்காணிப்பு விமானத்தை இலங்கைக்கு வழங்கியபோது சீனா அதற்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. தனது காரியமே கண்ணாக, இலங்கையில் தனது கால்களை ஊன்றுவதில் சீனா கவனமாக இருக்கிறது. கடன் பிடியில் சீனா இலங்கையை வைத்திருப்பது போல, இந்தியாவிற்கும் மேற்குலகிற்கும் இலங்கையில் இருக்கும் பிடி ஈழத்தமிழர் விவகாரம்தான்.



**இந்தியாவும் தன் தலையீட்டை விட்டுக் கொடுப்பதாக இல்லை. இலங்கையின் அரச, தனியார் துறைகளில் பாரிய முதலீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளது. புதுப்பிக்கப்படும் ஆற்றல், துறைமுகம், உட்கட்டுமானம், தொழில் நுட்பம், ஹைட்ரோகாபண் திட்டங்களில் கையெழுத்திட ஆலோசனை செய்கிறது. காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தக துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்காக 400 பில்லியன் நிதியுதவி கொடுக்கவும்இந்தியா முடிவு செய்துள்ளது. மன்னாரில் காற்றாலைகள் அமைக்கும் திட்டத்தையும் கருத்தில் கொண்டுள்ளது.**

இலங்கை தமது பிடியிலிருந்து விலகுவது தெரிந்தவுடன் இந்தியாவும் மேற்குலகும் தமிழர் பிரச்சனையைக் கையிலெடுக்கும்.

இப்போதும் அதுதான் நடக்கப் போகிறது. இந்தியாவும் மேற்கு நாடுகளும் இலங்கை முழுதாக சீனா பக்கம் போய்விடாமல் இருக்க தமிழர் பிரச்சனை, தீர்வு என்ற ஆப்பைக் கையிலெடுத்து இலங்கையை அடக்கி வைக்கப் போகின்றன. சீனா, துறைமுக நகர், அம்பாந்தோட்ட துறைமுகம், பட்டுப் பாதைத் திட்டம், நாட்டின் புனர் நிர்மாணம் என்று கடன்களை வாரி வழங்கி இலங்கையை கடன் சுமையில் தள்ளுகிறது. இலங்கைக்கு கடற்படைக் கலம் ஒன்றையும் அன்பளிப்பாகக் கொடுத்துள்ளது. அரச, தனியார் துறைகளில் பாரிய முதலீடுகள் செய்துள்ளது. யாழ்., தீபகற்பத்தில் மூன்று தீவுகளை வாங்கும் சீனாவின் முயற்சி இந்தியாவின் கடும் எதிர்ப்பினால் கைவிடப் பட்டாலும், அம்பாந்தோட்ட துறைமுகத்திற்கு மேலும் 974 மில்லியன் கடன் கொடுத்துள்ளது சீனா. இலங்கையின் துறைமுக சபைக்கு மட்டும் 700 அமெரிக்க டாலர் நிதியுதவி செய்துள்ளது.

இந்தியாவும் தன் தலையீட்டை விட்டுக் கொடுப்பதாக இல்லை. இலங்கையின் அரச, தனியார் துறைகளில் பாரிய முதலீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளது. புதுப்பிக்கப்படும் ஆற்றல், துறைமுகம், உட்கட்டுமானம், தொழில்நுட்பம், ஹைட்ரோகாபண் திட்டங்களில் கையெழுத்திட ஆலோசனை செய்கிறது. காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தக துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்காக 400 பில்லியன் நிதியுதவி கொடுக்கவும் இந்தியா முடிவு செய்துள்ளது. மன்னாரில் காற்றாலைகள்அமைக்கும் திட்டத்தையும் கருத்தில் கொண்டுள்ளது.

‘எல்லோருடனும் ஒத்துப்போகும் மனப்பாங்குள்ளவர்’ என்ற காரணத்தினால் பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டி இம்முறை தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளவும் கூடும். இங்கு தனித்துவிடப்பட்டிருப்பவர்கள் ஈழத் தமிழர்கள்தான். உண்மையில் யாருக்கும் தமிழர் பிரச்சனைக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுத் தரும் அக்கறையில்லை. அதற்கான முகாந்தரமும் இல்லை. பிரச்சனைகளின் போது தொட்டுக்கொள்ளும் ஊறுகாயாக மட்டுமே இருந்துவிடாமல் தகுந்த முடிவெடுத்து தீர்வு காணவேண்டிய பொறுப்பு தமிழர்களிடம் மட்டுமே உள்ளது.

# ஆரோக்கிய வாழ்வு

பவானி



உயிர்வாழ்வதற்கு உணவு அவசியமானது. நாம் ஆரோக்கியமாக வாழ்வதில்முக்கிய இடம் வகிப்பது நம் உணவுப்பழக்கமே என்பதில் எது வித மாற்றுக் கருத்தும் இல்லை. நமது உடலுக்குத் தேவையாக உள்ள தாதுப் பொருட்களையும் உயிர்ச்சத் துக்களையும் நாம் உணவிலிருந்தே பெற்றுக் கொள் கிறோம். எனவே ஆரோக்கியமான உணவினை போதுமான அளவு உட் கொள்வது அவசியமாகிறது.

ஆனால், இன்றைய நவீன உலகில் நாம் நேரத் தினை மீதப்படுத்தவும், ருசிக்காகவும் துரித உணவு களை உட்கொள்கிறோம். இது நம் உடல் நலத்தினை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பார்க்க வேண்டிய அவசியம் இங்கு உள்ளது.

தமிழர் உணவு முறையானது வாழ்வியல் சார்ந்த கலாசாரத்துடன் இணைந்தது. தமிழ்மக்கள் மருந்தாக உணவையே பயன்படுத்தினர்.

இதற்கானசான்றுகளை சங்க கால இலக்கியங் களான பத்துப்பாட்டு, எட்டுத் தொகை போன்றவற்றில் காணலாம். எந்த உணவை எந்த காலங்களில், எப்படி உண்ண வேண்டும் என எம் வாழ்வியலில் ஒரு வரை முறை உள்ளது. எமது முன்னோர்கள் வரகு, தினை, சாமை போன்ற உணவுகளை உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்தனர்.

ஆரோக்கியமான உணவுப்பழக்கம் எனும் போது வயிறு நிறையும்வரை அதை உணவால் இட்டு நிரப் புவதைத் தவிர்த்து, பாதி வயிற்றிற்கு உணவு, கால் பகுதி வயிற்றிற்கு தண்ணீர் அருந்துவது மீதிப் பகுதியைவெற்றிடமாக விடுவது என்பது அவசி யமாகிறது. நாம் எப்படி, எந்த நேரத்தில், எந்த வகையான உணவுகளை எடுத்துக் கொள் கிறோமோ அதுதான் எமது ஆரோக்கியத் தைத் தீர்மானிக்கிறது. துரித உண வுகளை உண்பதை தவிர்த்து கீரைவகைகள், காய்க்கறிகள், தானியங்கள் என்ப னவற்றை உண் பதே சாலச் சிறந் ததாகும். உணவு உட் கொண்டதும் தூங்குவது கூடாது. அத்துடன் கொழுப் புச்சத்துள்ள உணவை அதிகம்உட் கொள்வதை தவிர்த்து நம் ஆரோக் கியத்தைப் பாதிக்காத, சத்தான உணவுகளை உட் கொள்ளுத ல் நோய் நொடியின்றி நீண் டநாள் வாழ வழிசெய்யும். இன்றைய கால உணவுப்



# ஆரோக்கிய வாழ்வு

பழக்கமானது உடல்நலத்திற்கு உகந்ததல்ல. ஏனெனில் நாம் உட்கொள்ளும் பர்கர், பீட்சா, பரோட்டா போன்ற துரித உணவு வகைகள் மீண்டும் மீண்டும் பயை தூண்டவல்லன. அத்துடன் இதில் சுவையைக்கூட்டக் கலக்கப்படும் உப்பானது ஆரோக் கியமற்றது. இது பசியைத்தூண்டி மீண்டும் மீண்டும் சாப்பிடும் விருப்பைத் தூண்டிவிடுவதுடன் இந்த இரசாயனக் கலவை கள் உடல் உறுப்புகளையும் பாதித்துவிடும். இதனால் உடல்



பருமன் அதிகரித்து, பல பக்க விளைவுகளுடன் கூடிய வாழ்வைத்தந்து, சிறு வயது மரணம், உயர் ரத்த அழுத்தம், நீரழிவு, மாரடைப்பு போன்ற பல நோய்களை ஏற்படுத்துகிறது.

எனவே நாம் தினமும் ஆரோக்கியமான உணவைத் தேர்ந்து உண்பதே சாலச்சிறந்தது. தேர்ந்து உண்ணும் உணவே எம் வாழ்வுக்கான ஆரோக்கிய மருந்தாகும். நாம் சத்தானஉணவுகளை உண்ணும் போது, நம் உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் அதிலிருந்து கிடைக்கின் றன. இது நோய்ப் பாதுகாப்புக்குஅருமருந்தாகிறது.

இதனையே வள்ளுவப் பெருந்தகை தமது குறளில் ‘மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது பெற்றது உணின்’ எனக் கூறியுள்ளார். அதாவது நாம் தினமும் உண்ணும் உணவே நம்வாழ்வுக்கான ஆதா ரமாகும்.

எனவே, எமது உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றுவ தும் தகுந்த உடற்பயிற்சிகள் மூலம் உடலைக் காத்திரமாக வைத்திருப்பதும் வயது வேறுபாடின்றி எம்மை உடல், உள ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.



# பொருளாதாரமும் நம்மவர்நிலையும்

முடிவற்ற விடியலால்
விண்தொட்டு நிற்கிறது
விலையேற்றம்.....!

சாமி கூட
கண்ணயர்ந்து தூங்கி விட்டது.
நம்மவர் நெஞ்சமெல்லாம்
கல்லாகி கனத்து நிற்கிறது......

அத்தியாவசிய தேவையும்
விலையுயர்ந்து போனது.!
அது தவிர.
பயணத்திற்கு அவசியமான
பெற்றோல் வரண்டு போய்
நம் உறவுகள்
மாலை புலர்ந்தும்,
விடியல்மலர்ந்தும்



வரிசையாய்
தவம் கிடக்கின்றனர்.!

இது போதாதென்று
ஏழைகளின் சொகுசு வாகனம்
துவிச்சக்கர
வண்டிக்கு கூட
அதிக விலையேற்றம்.!

அலரி மாளிகைக்குள்
நுழைந்த போதுதான்
ஊகிக்க முடிகிறது.
இவ்வளவும்
நம் வியர்வை சிந்திய
வரிப்பணம் என்று.....!

வீழ்ந்து கிடக்கும் நாட்டை
தாங்கிப் பிடிக்க
சிறந்த தலைமை
உருவாகட்டுமே...!!
நம்மவர் துயரங்களும்
துடைத்தெறியட்டுமே.!!

ஜெ.சிந்துஜா



மாலினி மோகன்

# மார்தட்டும் மலையகம்

எம் மலையகத்தில் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. என்றாலும் அவர்கள் சாதிக்க தவறுவதில்லை. இச்சாதனைகளை இரட்டிப்பாக்க மலையகத்தை, மலையக பாடசாலைகளை செழிப்பாக்குங்கள் போதும். நாளை தலைநிமிரும் எம் மலையக சமூகம்.

ஒரு சமூகத்தின் நிலைமாற்றத்தில் அல்லது சமூக நகர்வில் கல்வி கற்றோர்கள் குறிப்பாக பட்டாதாரிகள் எண்ணிக்கை மிக முக்கியம் ஆகிறது. மலையகத்தை அடையாளப்படுத்தும் பல பட்டதாரிகள் வைத்தியதுறை, சட்டத்துறை, பொறியியல் துறை, வணிகத் துறை கணக்கியல் துறை என தமது தடத்தை பதித்துள்ளனர். மேலும் மிகச்சிறந்த எழுத்தாளர்களும் எமது சமூகத்தை முன்னேற்றும் வகையில் உருவாகியுள்ளனர். அந்தவகையில் பாடசாலை தவிர மாணவர்கள் வெளிவாரியாகவும் தனது கல்வியை தொடர்ந்து பட்டங்களை பெற்று மலையக கல்வியை இன்னும் வளர்ச்சி கட்டத்தில் வைக்கின்றனர். உதாரணமாக ONLINE கற்கைகள் , வெளிவாரி கற்கை நெறிகள், NVQ டிப்ளோமா, போன்ற பல.

தற்போது மலையக சூழலில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு துறை சார்ந்த சாதனைகள் தலை தூக்குகின்றன. உதாரணமாக மலையகத்தை பிறப்பிடமாக கொண்ட தர்ஜினி சிவலிங்கம்.

இவர் இலங்கையின் தேசிய வலைப்பந்தாட்ட அணியின் நம்பிக்கை நட்சத்திரமாய் ஜொலிக்கும் மலையகப் பெண். இவர் வோர்ல்ட் போஸ்ட் சூட்டர் அவர்ட் பெற்ற பெண்மணி.



மலையக பெருந்தோட்ட மக்கள் சமூகமே இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பு நல்குகின்றது என்றால் அது மிகையல்ல. அதுபோல தற்போது கல்விதுறை விருத்திக்கும் மலையகம் தன் பங்கை சற்று பெருக்கிக்கொண்டுள்ளது என்றுதான் கூற வேண்டும். 1940 களில் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட முறையான இலவச கல்வித்திட்டத்துக்குள் மலையக தோட்டப்புற பாடசாலைகள் சுமார் 30 வருடங்கள் கடந்த பின்னே இணைய முடிந்தது. இருந்த போதும் கல்வித்துறையில் இன்னோரன்ன பல சாதனைகளை படைத்து தன் தடத்தை அழுத்தப்படுத்தி வருகின்றது. இத்தாமதமே மலையகக் கல்வியின் வெற்றிக்கு வளர்ச்சிப் படிக்கட்டுக்கள்.

எம் மலையக பிள்ளைகளை சாதிக்க தூண்டும் திறவு கோல் அவர்களின் சிந்தனை தான். தன்னைச் சார்ந்தும் தன் சமூகம் சார்ந்தும் அவர்கள் சிந்திப்பதால் அடிமைகளான காலம் போய் இன்று பல துறைகளில் பற்பல பரிமாணங்கள் பெற்று மிளிர்கிறார்கள். இதற்கு கல்வியே, கல்வி தரும் அறிவே மூலகாரணம். எனவே இலங்கை மலையக கல்வியின் வளர்ச்சிக்கு நீண்டகாலம் காத்திருக்க தேவையில்லை. அதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளில் தட்டிக்கொடுத்தாலே போதும். வளங்களை பெற்றுக்கொடுத்தாலே போதும். கட்டிடம் இல்லாத, கதிரை, மேசை இல்லாத , போதியளவு ஆசிரியர்கள் இல்லாத எத்தனையோ பாடசாலைகள்

> **ஒரு சமூகத்தின் நிலைமாற்றத்தில் அல்லது சமூக நகர்வில் கல்வி கற்றோர்கள் குறிப்பாக பட்டாதாரிகள் எண்ணிக்கை மிக முக்கியம் ஆகிறது. மலையகத்தை அடையாளப்படுத்தும் பல பட்டதாரிகள் வைத்தியதுறை, சட்டத்துறை, பொறியியல் துறை, வணிகத்துறை கணக்கியல் துறை என தமது தடத்தை பதித்துள்ளனர். மேலும் மிகச்சிறந்த எழுத்தாளர்களும் எமது சமூகத்தை முன்னேற்றும் வகையில் உருவாகியுள்ளனர்.**



மேலும் லபுக்கலை பெரட்டாசி தோட்டத்தை சேர்ந்தசின்னக் கருப்பன் பவானி ஸ்ரீ என்ற சிங்கப்பெண் அண்மையில் நடந்து முடிந்த தெற்காசிய மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியில் கத்திச்சண்டை போட்டியில் வெற்றிபெற்றார். இவ்வுலகத்தில் நம் மலையகத்தின் சொத்து சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனை தெரியாதோர் யாருமுண்டா?. இதுவே மலைகத்தின் வளர்ச்சிக்கு சான்றல்லவா. மேலும் நுவரெலியா பிரதேசத்தின் லபுக்கலை கொண்டகலை தோட்டத்தை பிறப்பிடமாக கொண்ட மாதவன் ராஜ்குமாரன் தெற்காசியாவை வென்ற கட்டழகராக திகழ்கிறார். இவர் 2022 ஆகஸ்து மாதம் துபாய் நாட்டுக்கு சென்று ஆணழகர் போட்டியில் முதலாமிடம் பெற்று மலையகத்துக்கு பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தமிழ் எழுத்து துறையில் இளைப்பாறிய மல்லிகைப்பூ சந்தி திலகர் ஐயா, அண்மையில் காலமான மல்லிகை சி குமார், அமரர் சாரல் நாடன் ஐயா ,குறிஞ்சி தென்னவன் ஐயா, சிவனு மனோகரன் ஐயா, சி.வி.வேலுப்பிள்ளை ஐயா, போன்றோரும் இன்னும் தனது பணியில் சிறந்து விளங்கும் மலையகத்தின் மைந்தன் மொழிவரதன் ஐயா, வாழ்நாள் சாதனையாளர் விருது வென்ற தெளிவத்தை ஜோசப் ஐயா[இவர் ஊவாவை பிறப்பிடமாக கொண்டாலும் மலையகம் பற்றியே அதிகம் பேசியவர்]. மேலும் சு. முரளிதரன் ஐயா, லெனின் மதிவாணன் ஐயா, ஆர். சிவலிங்கம் ஐயா என பெருந்தகைகள் பலரும் தடம் பதித்துள்ளனர்.

1965 ஆம் ஆண்டுதான் மலையக மாணவர்களுக்கு பல்கலைக்கழக வாய்ப்பு கிட்டியது என மலையக வரலாறு பேசும்.

இவ்வாண்டுதான் மலையகத்திலிருந்து நேரடியாக பல்கலைக்கழகத்துக்கு 8 பேர் தெரிவாகினர். அதிலிருந்து தொடர்ந்து வந்த ஆண்டுகளின் மலையக மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி வெறும் 1 சதவீதமாகும். படிப்படியான முன்னேற்றம் கண்டு இன்று சுமார் 10 வீதத்துக்கு மேல் மலையக மாணவர்கள் தெரிவாகுகின்றனர். இது எம் கல்வியின் வளர்ச்சி போக்கை காட்டுகிறது.

ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழக அனுமதிகளில் எம்மலையக மாணவர்கள் மொத்தத்தில் 10.50 வீதத்தை அண்மிக்கின்றனர். அது போல 2018/2019 இல் மலையக மாணவர்கள் அனுமதி 3247 ஆகும். 2020 களிலும் மலையக மாணவர்களின் பல்கலைக்கழக 3400 ஐ தொட்டது.

எனவே கடந்த ஆண்டறிக்கைகளை ஆய்கையில் எமது மலையக கல்வி வெற்றி கண்டுள்ளதோடு தனக்கென ஓர் இடத்தை தக்கவைத்துள்ளமை அறியமுடிகின்றது.

எனவே அண்மைய தரவுகளின்படி இலங்கையில் மலையக்கல்வி ஓர் தனி இடத்தை எட்டிப்பிடித்துள்ளமை கண்கூடு. கல்விக்கான குறைபாடுகள் நீக்கப்பட்டு நவீன வசதிகள் மலையகத்தின் வசமானால் காலப்போக்கில் கல்வியில் முதலாம் இடம் மலையகத்தை வாவென அழைப்பதும் சாத்தியமே.

**மலையக கல்வி வெற்றி கண்டுள்ளதோடு தனக்கென ஓர் இடத்தை தக்கவைத்துள்ளமை அறியமுடிகின்றது. எனவே அண்மைய தரவுகளின்படி இலங்கையில் மலையக்கல்வி ஓர் தனி இடத்தை எட்டிப்பிடித்துள்ளமை கண்கூடு. கல்விக்கான குறைபாடுகள் நீக்கப்பட்டு நவீன வசதிகள் மலையகத்தின் வசமானால் காலப்போக்கில் கல்வியில் முதலாம் இடம் மலையகத்தை வாவென அழைப்பதும் சாத்தியமே.**



# காத்திருப்பு!!



நீ விட்டுச் சென்ற
இடத்தில்தான்
நான் இன்னும்
உனக்காக காத்திருக்கிறேன்!

பல காலமாய்
நெஞ்சம் வாடுது
உன்னோடு கதைபேச
மனம் நாடுது

என் நேசமே!!

எனதுடலில் ஒட்டுண்ட
சன்னத் துகள்களோடும்
கலைந்து போகா கந்தக
வாசனையோடும்
நெருஞ்சி முள்ளின் மீதுதானே
எனதுறக்கம்!!

வெட்டி எறிந்திட்டபோதும்
வளரும் நகம்போல்
உனதான நினைவுகளும்
படர்ந்து செல்கிறது!

முகவரி இன்றி
தொலைதூரம் சென்றாயே!
கண்கள் இருந்தும்
குருடாக வாழ்கிறேன்.
கனதியான மனதோடு
தேடுகிறேன்.

மன்னாதி
எம் மன்னனவன் சீமையிலே
நமது கனவுகளும்
சாம்பலாகிப் போனதுவே!


ஓ..எனதுறவே!!

உன் நினைவுகள்
எனை வதம் செய்கிறதே!
இமைகளின் மழைதனில்
நனைகிறேன்.

எந்தன் நெஞ்சமோ
உனதான நினைவுகளே
தஞ்சமென
சந்தம் இசைக்கிறது..

ஒரு முறை வருவாயோ.
எம் மண்ணிலே
மீண்டும் உன் பாதம் பதித்து.....!!

பிரபா அன்பு



# மகிழ்ச்சி

பிரெஸ்னோ பசிபிக் பல்கலைக்கழகத்தில் ஒரு சொற்பொழிவாளர் கூட்டத்தில் ஒரு தம்பதியரில் உள்ள பெண்மணியைப் பார்த்து கேட்டார்.

‘உங்கள் கணவர் உங்களை சந்தோஷமாக பார்த்து கொள்கிறாரா?’

அருகிலிருந்த கணவர் நிமிர்ந்து, நம்பிக்கையுடன் அமர்ந்தார். காரணம், மனைவி அவரிடம் எந்த புகாரும் சொன்னதே இல்லை. அவர் சந்தோஷமாகவே இருந்தார்.

ஆனால், அந்த மனைவி தெளிவாக ‘இல்லை, என் கணவர் என்னை சந்தோஷமாக வைத்துக்கொள்ளவில்லை’ என்றார். கணவர் அதிர்ந்தார். ஆனால், மனைவி தொடர்ந்தார்.

‘என் கணவர் என்னை சந்தோஷமாக வைத்திருக்கவில்லை. என்னை சந்தோஷப்படுத்தியதும் இல்லை. ஆனால், நான் சந்தோஷமாக இருக்கிறேன். நான் சந்தோஷமாக இருப்பது என்பது அவரை சார்ந்தது இல்லை. என்னையே சார்ந்தது. நான் சந்தோஷமாக இருக்கிறேனா என்பது நான் சம்பந்தப்பட்ட விஷயம்.’

‘வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சந்தோஷமாக இருப்பது என்பது என் முடிவு. அடுத்தவரால் நான் சந்தோஷமாக இருப்பேன் என்றால், இன்ன பொருளால் நான் சந்தோஷமாக இருப்பேன் என்றால், இன்னின்ன தருணங்களில் நான் சந்தோஷமாக இருப்பேனென்றால், நான் பெரும் பிரச்சனையில் இருக்கிறேன் என்று பொருள்.’

‘நம்மை சுற்றியுள்ள எல்லாம் மாறிக்கொண்டே இருக்கின்றன.



மனிதர்கள், செல்வங்கள், என் உடல், தட்பவெப்பம், என் முதலாளி, சந்தோஷங்கள், நண்பர்கள், எனது உடல் மற்றும் மன ஆரோக்கியம் எல்லாமே. இது ஒரு நீண்ட பட்டியல்.’

‘என்ன ஆனாலும் சந்தோஷமாக இருப்பது என்பது நான் எடுத்த முடிவு. நிறைய இருந்தாலோ, குறைவாக இருந்தாலோ என்

**குடும்பம் என்றால் விட்டு கொடுத்து தான் போக வேண்டும் என்பது பெரியோர் கருத்து. ஒரு பெண்ணுக்கே உரித்தான விருப்பு வெறுப்புகள் திறமைகள் ஆற்றல்கள் அனைத்துமே இவற்றோடு சேர்ந்து விட்டுக்கொடுக்கப்படுகின்றது என்பது தான் உண்மை.**

# மகிழ்ச்சி

சந்தோஷம் குறைவதில்லை. வெளியே சென்றாலோ, வீட்டில் இருந்தாலோ, ஏழையாக இருந்தாலோ, பணக்காரியாக இருந் தாலோ என் சந்தோஷம் குறைவதில்லை.'

'திருமணத்துக்கு முன்னும் சந்தோஷமாகத்தான் இருந்தேன், பின்னும் சந்தோஷமாகவே இருக்கிறேன். என்னை பற்றி எனக்கே சந்தோஷமாக இருப்பதால் சந்தோஷமாக இருக்கி றேன்.'

'என் வாழ்க்கையை நான் விரும்ப காரணம் என் வாழ்க்கை மற்றவர்களதை விட சுலபமானதாக இருப்பதால் அல்ல. நான் தனிப்பட்ட முறையில் சந்தோஷமாக இருப்பது என்று தீர்மானித் திருப்பதால். நானே என் சந்தோஷத்துக்கு பொறுப்பு.'

'இதை நான் ஒரு தீர்மானமாக மனதில் கொள்ளும்போது, என்னை சுமக்கும் பொறுப்பை மற்றவர்களிடமிருந்து நீக்குகி



றேன். இது அனைவரது வாழ்க்கையையும் எளிதாக்குகிறது. அதனால்தான், எங்கள் திருமண வாழ்க்கை இத்தனை ஆண்டு களாக சந்தோஷமாக இருந்து வருகிறது' என்றார்.

கைதட்டல் ஓயவே இல்லை.

உங்களை சந்தோஷமாக வைத்துக்கொள்ளும் பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்காதீர்கள். வெயிலோ, மழையோ, உடல் சரியில்லையா, பணமில்லையோ, காயப்பட்டிருந்தாலோ, விரும் பப்படவில்லையோ உங்கள் மனதில் உள்ள சந்தோஷத்தை விட் டுக்கொடுக்காதீர்கள். உங்களை நீங்கள் மனதார மதிக்கும்வரை உங்களுக்குள் நீங்களே சந்தோஷப்பட்டுக்கொள்ளுவீர்கள். சந்தோஷம் உள்ளே உள்ளது. வெளியில் இல்லவே இல்லை. பிறரது சந்தோஷங்களுக்காக வாழும் போது தான் எம் தனிப்பட்ட சந்தோஷங்கள் விரும்பியோ விரும்பாமலோ பறிக்கப்படுகின்றன ஏன் புதைக்கப்படுகின்றன என்று கூட சொல்லலாம்.

உங்களுக்கு பிடித்ததை நீங்கள் செய்வதை நிறுத்தாமல் இருப்பதே நல்லது. குடும்பம் என்றால் விட்டு கொடுத்து தான் போக வேண்டும் என்பது பெரியோர் கருத்து. ஒரு பெண்ணுக்கே உரித்தான விருப்பு வெறுப்புகள் திறமைகள் ஆற்றல்கள் அனைத் துமே இவற்றோடு சேர்ந்து விட்டுக்கொடுக்கப்படுகின்றது என்பது தான் உண்மை.



# தன்னம்பிக்கை

வாழ்க்கை எனக்கு
வண்ணமலர்
சோலையில்லை
போகின்ற பாதை
கற்களும் முட்களும்
நிறைந்த ஒற்றை
வழிப்பாதை!

சென்றிடும் பாதையில்
கண்டதெல்லாம்..
தோல்விகளும்
துரோகங்களுமே!

ஆனாலும்.
அத்தனை துயரத்திலும்
அழுதுஅடம்பிடித்து
எழுந்து
அன்னையாய்
தோழியாய்
அரவணைத்து
அகமகிழ்ந்து
புதையுண்டு
போகாமல்
தலைநிமிர்ந்து
நான் வாழ
கற்றுத்தந்தது-
நம்பிக்கை.

நம்பிக்கை
துணையிருந்தால்
எத்தனை ஆயிரம்
துயர்வரினும்
சூரியனைக்கண்ட
பனிபோல
ஓடிவிடும்.

நம்பிக்கையோடு
நடவுங்கள் - நாளை
விடியல்
நம்கையில்!!

கலை





பிரியா (நுவரெலியா, இலங்கை)

# தொழிலாளியும், கம்பனியும்

## ஒரே பார்வையில்

இலங்கையில் தேயிலை உற்பத்தி என்பது வெளிநாட்டுவருமானத்தைப் பெற்றுத் தரக்கூடிய பிரதான வளமாகக் காணப்படுகின்றது. இது தேசிய வருமானத்திலும் முக்கிய பங்களிப்பு வகிக்கின்றது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2% ஆக இருந்து 2013ம் ஆண்டு ஆயிரத்து ஐந்நூற்று இருபத்தேழு மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்று கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கோப்பி பெருந்தோட்டங்கள் ஏமியா வஸ்டரிக்ஸ் என்ற நுண்மத்தாக்குதலுக்குள்ளாகி அழிவடைந்தது. அதன் பின்னர் கோப்பி பெருந்தோட்ட அதிகாரிகள் வேறு ஒரு பயிருக்கான தேவையை உணர்ந்தமையினால் தேயிலை பயிர் அறிமுகப்படுத்தப்பட்டது. லூல்கந்துரை எனும் இடம் தேயிலை வளர்ப்பிற்கு பொருத்தமான இடமாகக் கருத்தப்பட்டது. குறித்த பகுதியில் ஜேம்ஸ் ரெய்லர் என்பவரால் 1867ம் ஆண்டு 19 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டது. ஏற்கனவே வட இந்திய பகுதியில் தேயிலை உற்பத்தியில் அனுபவம் பெற்றிருந்த ரெய்லர் தேயிலை இலையை சுருட்டி, வாடிய தேயிலைகளை களிமண் அடுப்பில் கரியை பயன்படுத்தி சுட்டு பல சோதனைகளை மேற்கொண்டார். இவ்வாறு தயாரிக்கப்பட்ட தேயிலை இலண்டன் நகர ஏலத்தில் விலையேறப் பெற்றமையின் காரணமாக இலங்கையின் தேயிலை உற்பத்திக்கு ஊக்கமளித்தது.



1873 – 1880 வரை உற்பத்தி செய்யப்பட்ட 12 கிலோ தேயிலை உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 1890ம் ஆண்டு இலங்கை 22 ஆயிரத்து 900 டொன் தேயிலை உற்பத்தியில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தியது. 1971ம் ஆண்டு வரை பெரும்பாலான பெருந்தோட்டங்கள் பிரித்தானியரின் கைவசம் காணப்பட்டன. இவை




# தொழிலாளியும், கம்பனியும்

நில மறுசீரமைப்பு சட்டத்தின்படி அரசாங்க வசப்பட்டன.

1992ம் ஆண்டு தேயிலை பெருந்தோட்டங்களின் நிர்வாகம் 22 தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆரம்பத்தில் பெருந்தோட்டங்கள் தனியார் நிறுவனங்களிடம் வழங்கப்பட்ட போது கூட்டு ஒப்பந்த அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்கள் நிர்வகிக்கப்படவில்லை. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நியதி சட்டங்கள் மற்றும் பொதுவான தொழிற்சட்டங்களை அடிப்படையாக கொண்டு அவை நிர்வகிக்கப்பட்டன. இதன் காரணமாக சம்பளம் சம்பள நிர்ணய சபையின் ஊடாக தீர்மானிக்கப்பட்டன. 1994ம் ஆண்டின் பின்னர் அரசாங்கம் சம்பள நிர்ணய விடயத்திலிருந்து விலகிகொண்ட பின்னர் பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிற்சங்கங்களை கொண்டு கூட்டு ஒப்பந்தம் மூலம் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்க ஆரம்பித்தன.

ஆரம்பத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் மாத்திரம் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதுடன் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் ஒருங்கிணைந்த பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியனவும் தொழிற்சங்க பிரதிநிதிகளாக கைச்சாத்திட்டன.




**“கூட்டு ஒப்பந்தம் 20 வருடங்களைக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் கூட்டு ஒப்பந்தம் இருந்த போதும் சரி இல்லாத போதும் சரி முறையாக அதிகரிக்கப்படவில்லை. வாழ்க்கைச் செலவு உயரும் அளவிற்கு தொழிலாளர்களுக்கு போதுமான சம்பளம் கிடைப்பதில்லை. அவர்களது வாழ்வாதாரத்தை சமாளிக்க முடியாமையின் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் விவசாயம் உள்ளிட்ட பகுதி நேர தொழில்களை செய்து வருகின்றனர்.”**

இதுவே 1996ம் ஆண்டு முதல் கூட்டு ஒப்பந்தம் எனும் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது. பெருந்தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தொழிற்சங்கங்களுக்கும் பெருந்தோட்ட கம்பனிகள் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் 1998ம் ஆண்டு முதலாவது கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது தொழிலாளர்களின் நலன் குறித்து அமைந்ததுடன், மலையக மக்களின் வாழ்வியலைத் தீர்மானிக்கும் அம்சமாகவும் மாறியது. கிட்டத்தட்ட பன்னிரண்டு வரையிலான கூட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

கூட்டு ஒப்பந்தம் 20 வருடங்களைக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பெருந்தோட்ட தொழிலாளர்களின்



# தொழிலாளியும், கம்பனியும்



சம்பளம் கூட்டு ஒப்பந்தம் இருந்த போதும் சரி இல்லாத போதும் சரி முறையாக அதிகரிக்கப்படவில்லை.

வாழ்க்கைச் செலவு உயரும் அளவிற்கு தொழிலாளர்களுக்கு போதுமான சம்பளம் கிடைப்பதில்லை. அவர்களது வாழ்வாதாரத்தை சமாளிக்க முடியாமையின் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் விவசாயம் உள்ளிட்ட பகுதி நேர தொழில்களை செய்து வருகின்றனர்.

இன்னும் சிலர் தோட்டப் புறங்களை விட்டு வெளியேறி நகர்புறங்களில் தொழில்வாய்ப்புக்களைச் செய்து வருகின்றனர். வளரும் தலைமுறையினர் கல்வி உதவியுடனோ, ஏதாவது ஒரு வகையில் பெருந்தோட்ட தொழிலில் இருந்து விடுதலையாகி நிரந்தர வருமானத்தை பெற்று கொள்ளும் வாழ்க்கை முறையை தேடி செல்கின்றனர். குறித்த ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் அல்லது முழுமையாக இரத்து செய்யப்பட்டு இலங்கையில் ஏனைய தொழிலாளர்கள் அனுபவிக்கும் சம்பள உரிமைகளுடனான மாத சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பதே கடந்த காலங்களில் இந்த தொழிலாளர்களின் கோரிக்கையாக காணப்பட்டது. கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்த பின்னர் இன்னும் பல இன்னல்களை சந்திக்க நேரிட்டுள்ளது.

ஆனால் இவர்களின் உள உணர்வுகளை புரிந்து கொள்ளாத சில இலாப நோக்கமுடைய சின்னத்தனமான அரசியல்வாதிகள் அவர்களை போராட்டங்களை நடத்துமாறு கோரி அவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் கீழ் மட்டத்திற்கு கொண்டு செல்கின்றனர். இதை புரிந்து கொள்ள முடியாத நம் இனம் அவர்களின் ஆட்டுவித்தல்களுக்கு ஆடுகின்றன. 200 வருடங்களாக கூலி தொழிலாளிகளாக வாழ்ந்து வரும் நம் மலையக சமுதாயம் மாற வேண்டும். அரசியல்வாதிகள் இவர்களின் வறுமையை வைத்து தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். யாரும் இவர்களின் தேவைகளை அறிந்து செயல்படுவதில்லை என்பதை இவர்கள் தாமதமாகவே புரிந்து கொள்கின்றனர்.



உலக சந்தையில் தற்போது இலங்கையின் தேயிலை விற்பனை ஒரு ஸ்திரமான நிலையில் இல்லை. இதனால் தொழிலாளர்களுக்கு நாளொன்றிற்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுத்தரமுடியாத சூழ்நிலை காணப்படுவதாக குறித்த கம்பனிகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே அவர்களின் நிலை கருதியும் நாம் செயற்பட வேண்டும். உதாரணமாக ஒரு குடும்பத்தின் வருமானம் 5 ஆயிரம் ரூபாவாக காணப்படும் எனில் அந்த வருமானத்திற்குள்ளாகவே அந்த மாதம் முழுவதும் வாழுவமே தவிர நமது அத்தியவசிய தேவைகளைவிடுத்து ஆடம்பரத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளமாட்டோம் தானே? அது போல இலங்கையின் தேயிலை உலக சந்தையில் மீண்டும் ஒரு நல்ல விலைக்கு விற்பனையாகும் வரையில் நாம் அந்த தேயிலை உற்பத்தியின் வளர்ச்சிக்கு எவ்வாறு உந்து கோலாக செயற்பட வேண்டும் என எண்ண வேண்டுமே ஒழிய கம்பனிகளுக்கு எதிராக போராட்டங்களை மேற்கொள்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை. நாம் நமக்கான தேவைகளை கம்பனியிடம் நேராக எப்பொழுது கேட்க முனைகின்றோமோ அன்று தான் நம் சமூகம் முன்னேறும். அதுவரை அரசியல்வாதிகள் இந்தியாவில் மாத்திரம் அல்ல உலக நாடுகளிலும் வீடு காணிகளை கொள்வனவு செய்து சுகபோகமாக வாழ்ந்து வருவார்கள். நாம் கம்பனியின் போக்கில் செல்வோமாயின் நமது நிலை அறிந்து கம்பனி நிர்வாகம் நமக்காக நாம் கோராமலே சம்பளத்தை உயர்த்தி கொடுக்கும். நாம் வெட்கப்படும் இடத்தில் உயர்த்தப்படுவோம் என வேதங்கள் கூட சுட்டிக்காட்டுகின்றன. எனவே நாம் கொஞ்சம் பணிந்து செல்வதினால் நமக்கு எந்த நஷ்டமும் ஏற்படப் போவதில்லை என்பது எனது கருத்து.

மேலும், இன்றைய கால கட்டத்தில் காணப்படும் பொருளாதார விலையேற்றம் காரணமாக மலையகத்தில் வட்டிக்கு பணம் கொடுத்தல், நுண் நிதி நிறுவனங்கள் ஆகியன அதிகளவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இதன் காரணமாகவும் மக்கள் வெளியிடங்களுக்கு தொழில் தேடி செல்கின்றனர். மக்கள் தாம் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை வட்டியாக செலுத்துகின்றோம் என்பதை உணரும் வரையில் அவர்களுக்கு மாதம் இலட்சத்திற்கு மேல் உழைத்தாலும் அந்த பணம் போதுமாக இருக்காது என்பதே உண்மையாகும். தமது வருமானத்திற்கேற்ப செலவு செய்தால் மக்களின் மாத தேவைகள் குறிப்பிட்ட சம்பளத்திலேயே மட்டுப்படுத்தப்பட்டு விடுவதுடன் மீதம் வைக்க கூடிய நிலையும் ஏற்படும். மேலும் நகர்புறங்களில் வாழும் மக்கள் நீர், தங்குமிடம் உட்பட அனைத்திற்கும் பணம் செலவிட வேண்டும். ஆனாலும்



தோட்ட புற மக்களுக்கு நீர், தங்குமிடம் இலவசம், அவர்களின் வீட்டு சுற்று புறங்களில் தமக்கு விவசாயம் அல்லது கால்நடை வளர்ப்பு போன்ற சிறு சிறு தொழில்களில் ஈடுபடவும் முடியும். உதாரணத்திற்கு சில மலையக தொழிலாளர்கள்



# தொழிலாளியும், கம்பனியும்

வீட்டில் குறைந்தது ஏதாவது ஒரு வாகனமாவது காணப்படுகின்றது. இவர்களும் இந்த தோட்டத்தில் வேலை செய்து மீதம் வைத்து தான் இவ்வாறான நாகரீக உலகத்திற்கு வந்துள்ளனர். எனவே அனை வரும் உள்ளதை கொண்டு வாழ பழகி கொண்டால் அவர்களுக்கு மேலதிக தேவைகள் ஏற்படாது.

அது மாத்திரமல்ல, தோட்ட தொழிலாளிகள் தமக்கு சம்பளம் போதாது என வெளியிடங்களுக்கு சென்று விட்டால் அந்த தோட்டங் களை கம்பனி எவ்வாறு நடத்தும். குறித்த பணிகளை மேற்கொள்வ தற்கு தொழிலாளர்கள் இல்லாமல் தோட்டங்களை எப்படி பராமரிக்க முடியும். எனவே இரு நபர்களின் பணிகளை ஒருவர் மேற்கொள்ளும் தேவை இங்கு எழுகின்றது. இதனால் தொழிலாளர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். முழுக்க முழுக்க தவறை நம்மீது வைத்து கொண்டு கம்பனி நிர்வாகத்தை குற்றம் சுமத்துவதில் எவ்வித பய னும் இல்லை. நமது பணியை நாம் சரியாக செய்து விட்டு தோட்ட நிர்வாகம் நமக்கு சம்பளம் அதிகரிக்கவில்லை என போராட்டங்களை மேற்கொண்டால் தவறில்லை. நமது பணி ஆங்கு அவ்வாறே கிடக்க நாம் வீணாக சம்பள உயர்வை மாத்திரம் பேசுவதில் பயனில்லை. ஒரு அரசியல்வாதி ஒரு விடயத்தை உள்ளடக்கி போராட்டம் நடத்தினால் அவரது எதிர் அரசியல்வாதி வேறொரு விடயத்திற்காக போராட்டம் நடத்தத்தான் செய்வார் இது அரசியல் சூட்சுமம். இதை நாம் நன்கு கருத்திற்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் நம் வாழ்வை நிர்ணயிக்க விட்டு விடக் கூடாது. நம் வாழ்க்கை நம் கையில் எனவே தோட்ட தொழிலாளர்கள் நாம் வாழும் தோட்டப் புறங்களை முதலாவதாக நேசித்து அந்த நிர்வாகங்கள் மகிழும்படி நம் உற்பத்தி களை மேம்படுத்தி காட்ட வேண்டும். பின்னர் அவர்கள் தாமாகவே முன்வந்து நமக்கான சம்பள உயர்வை பெற்றுத் தருவார்கள். உதார ணமாக குறிப்பிட்டால் தலவாக்கலை தோட்டத்தில் நாளொன்றிற்கு அந்த நிர்வாகம் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குகின்றது. அங்குள்ள தொழிலாளர்களும் நிர்வாகத்துடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றர். நிர்வாகம் தொழிலாளர்கள் மத்தியில் நல்ல சுமுகமான நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலை ஏனைய தோட்ட பகுதிகளுக்கும் வரவேண்டும். அப்போது இந்த கூட்டு ஒப்பந்தமோ அரசியல் தலையீடு களோ தேவையில்லை. தொழிலாளர்கள் பக்கம் வெற்றி கிட்டும்.

மேலும் தோட்ட நிர்வாகம் தனக்கு கிடைக்கும் இலாபத்தை அடிப் படையாக கொண்டு தமது தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை வழங்கி அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பட்சத்தில் தோட்ட புறங்களும் செழிப்பாகும் தொழிலாளர்களின் வாழ்க்கையும் செழிப்பாகும். சம்பள போராட்டம் ஆரம்பிக்கும் போதெல்லாம் குறித்த தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இலஞ்சம் வழங் குவதைவிட தொழிலாளர்களை அழைத்து அவர்களது பிரச்சினை களுக்கு செவிகொடுக்கும் பட்சத்தில் பிரச்சினைகள் ஏற்படாது. எந்தவொரு விடயத்திலும் தரகர் மூலம் தீர்வு காண முற்பட்டால் இதுமாதிரியான பிரச்சினைகள்தான் எழும். அரசியல்வாதிகளுக்கு செலவு செய்யும் பணத்தை வெயிலிலும், மழையிலும் கஷ்டப்பட்டு உழைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்குவதினால் நிர்வாகத்திற்கு குறைவேதும் ஏற்படப்போவதில்லை. இந்த சம்பள பிரச்சினை என்பது தோட்ட தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினர் இணைந்து கலந்து ரையாடி முடிவெடுக்க வேண்டும். வீணாக கூட்டு ஒப்பந்தமும் தேவை யில்லை, அரசியல்வாதிகளின் நடுநிலைமையும் தேவையில்லை. வீணாக முரண்பட்டு கொள்வதிலும் போராட்டங்களை நடத்துவதிலும் ஏற்பட்ட பலன் என்ன? நிலுவை சம்பளம் ஏற்பட்டது தான் மிகுதி.

எனவே தற்காலத்தில் வசிக்கும் நாம் எதையும் ஆராயாமல் வீணே யாரோ ஒருவரின் கருத்துக்களை கொண்டு நமது தீர்மானங்களை முன்னெடுப்பதைவிட, நன்றாக சிந்தித்து செயற்படுவது சிறந்தது என் பதே நான் இந்த கட்டுரையை எழுதுவதன் நோக்கமாகும். மழையிலும் வெயிலிலும் கஷ்டப்படுவது நாம். ஆனால் நமது நெருப்பில் குளிர் காய்வது எங்கோ இருந்து வந்த மரபு வழி அரசியல்வாதிகளும், நவீன அரசியல்வாதிகளும் தான் எனவே அரசியல்வாதிகளை புறக்கணித்து நாம் அகிம்சை ரீதியான அறவழி போராட்டங்களை நடத்துவோம். வெற்றி நிச்சயம். வாழ்க மலையகம்.



> **தோட்ட நிர்வாகம் தனக்கு கிடைக்கும் இலாபத்தை அடிப்படையாக கொண்டு தமது தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை வழங்கி அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பட்சத்தில் தோட்ட புறங்களும் செழிப்பாகும் தொழிலாளர்களின் வாழ்க்கையும் செழிப்பாகும். சம்பள போராட்டம் ஆரம்பிக்கும் போதெல்லாம் குறித்த தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இலஞ்சம் வழங்குவதைவிட தொழிலாளர்களை அழைத்து அவர்களது பிரச்சினைகளுக்கு செவிகொடுக்கும் பட்சத்தில் பிரச்சினைகள் ஏற்படாது**

# ஏக்கம்!



**கார்த்திகை**

பகற் பொழுதுகள் - இங்கே
சுருக்கமானவை.!
கடுகதியில்
சுழன்றோடும்
இயந்திர வாழ்வு!
வேலை, வீடு,
மறுபடி
வேலை. வீடு.
திரும்பிப் பார்க்க முன்னே
பொழுது சாய்ந்துவிடும்!!

இரவுகள் அப்படியல்ல!
அவை நீண்டவை.
மிக நீண்டவை
அழகிய பொழுதுகள்,
பழகிய மனிதர்கள்,
தோள் கொடுத்துதவிய
உன்னத வீரர்கள்
பிறப்புகள் இறப்புகள்..!
என்று.
தொலையாத எங்கள்
வண்ணக் கனவை
புரட்டிப் பார்த்து நான்
தூக்கம் தொலைந்த
இரவுகள் ஏராளம்!!

என் தாய்நிலமே!!
உனக்கும் எனக்குமான
பந்தம்
நெருக்கமானது..
அழகானது
சாவினாலும்
பிரிக்க முடியாதது..!

பாதி நாட்கள்- மனம்
அமைதி இழந்து
அல்லாடும்..!
நினைவுகள் துரத்தும்!
அப்போதெல்லாம்
உன் நினைவுதானே
என் மனதை
மயிலிறகாய் வருடி
அமைதி தந்திருக்கிறது.!!

பாம்பாய் வளைந்து
நெளியும்
குச்சொழுங்கைகள்
வண்டிற் பாதைகள்,
வயல் வரப்புகள்.
செழித்து வளர்ந்த
வாழைத் தோப்புகள்
காய்ந்து கிடக்கும்
கலட்டி நிலத்திலும்
மேய்ந்து திரியும்
ஆட்டு மந்தைகள்.
கோவில் திருவிழா.
ஒலி பெருக்கி கதறல்
சோளகக் காற்று
சோவெனப் பெய்யும்
மாரி மழை.!!!
எதை நினைக்க?
எதை விட?

உன்னைப் பிரிந்து
அந்நிய தேசத்தில் வாழ்க்கை!
விடியற் பொழுதில்
வாசற்கதவை
திறக்கும்போது
இன்னமும்
வண்டில் மாட்டின்
சலங்கைச் சத்தத்திற்காய்
மனதுகிடந்து
அடித்துக்கொள்ளும்!
காதில் விழுவதென்னவோ
விரையும் கார்களின்
உறுமல் சத்தம் மட்டுமே!!

பறவைகளின் கீச்சொலிகூட
இங்கு பிடிக்கவேயில்லை!
வாசல்வரை
வந்து போகும்
மைனாக் குஞ்சைத் தவிர

# ஏக்கம்!

விடியற் பொழுதில்
கோழி கூவுதற்காய்
காத்திருக்கும் மனது
எதையும்
ஏற்றுக்கொள்ள மறுக்கிறது

சப்பாத்து நாடாவை
இறுக்கும் போதெல்லாம்
புழுதி மண்ணில்
வெற்றுக் காலால்
அலையத் தோன்றும் எனது
ஏக்கத்தை
பிள்ளைகளால் கூட
புரிந்து கொள்ள முடிய
வில்லை!!

பாவம்!! அவர்களும்தான்
என்ன செய்வார்கள்?
தேசத்தைத் தொலைத்த
பெற்றோருக்கு
அந்நிய மண்ணில்
அகதியாய்ப் பிறந்தவர்கள்.!!

வெவ்வேறு மொழிகள்
பல நாட்டுக் கலாசாரம்..
கடுகதி வாழ்க்கை.
தலையசைப்புடன்
அயலாருடனான உறவு
முடிந்து போகும்..!!
மிஞ்சிப் போனால்
ஒரு 'மோர்னிங்'
மனத்திலிருந்து வராமல்
உதட்டிலிருந்து மட்டுமே
எழும் உபசார
வார்த்தைகள்!!

என் தாய்மண்ணே..!!

என்
அடுத்த தலைமுறை
உன்னிலிருந்து
தள்ளியே இருப்பது
வேதனை தருகிறது!!

எங்கள் தலைமுறையினர்
அப்படியல்ல
நானறிந்த பலர்
கால் இங்கும்
மனம் அங்குமாக
அல்லாடுகிறோம்...!

ஆனாலும்
நாங்களும்கூடத்தான்
அந்நிய மண்ணின்
சொகுசு வாழ்வுக்கு
பழக்கப்பட்டுவிட்டோம்..

மறுபடி
கட்டாந்தரையில்
பாய் விரித்துப்
படுக்க முடியுமா?
தோட்டத்தில் இறங்கி
தண்ணீர் பாய்ச்ச
உடம்பு வணங்குமா..?
அடுப்பு மூட்டி
சமையல் ஆக்கவும்
பொடிநடையாக
ஊரை அளக்கவும்
முடியுமா?
தெரியவில்லை

உன்னைப் பிரிந்த
ஏக்கம் மட்டுமே
நெஞ்சக் கூட்டில்...!





# பிடித்த கதை

உலக பணக்காரர்கள் 1000 பேர் வரிசையில் ஆயிரத்தின் அருகில் இருப்பவர் நைஜீரியாவை சேர்ந்த ஃபெமி ஒடெடோலா ஆனால் அவர் தான் மிகவும் மகிழ்ச்சியான பணக்காரர்கள் வரிசையில் முதல் இடத்தில் இருப்பவர்..

அவர் ஒரு நேர்காணலில் ஃபெமி ஒடெடோலாவை தொகுப்பாளர் பேட்டி எடுத்தார்...

'உங்களை வாழ்க்கையில் மகிழ்ச்சியான மனிதராக மாற்றியது என்ன?'என்ற கேள்விக்கு ..

ஃபெமி கூறினார்:

'நான் வாழ்க்கையில் மகிழ்ச்சியின் 4 நிலைகளை கடந்து விட்டேன், இறுதியாக உண்மையான மகிழ்ச்சியின் அர்த்தத்தை புரிந்துகொண்டேன்.'

1.முதல் கட்டமாக செல்வத்தையும் வழிமுறைகளையும் குவிப்பதாக இருந்தது. ஆனால் இந்த கட்டத்தில் நான் விரும்பிய மகிழ்ச்சி எனக்கு கிடைக்கவில்லை.

2.பின்னர் மதிப்புமிக்க பொருட்கள் மற்றும் பொருட்களை சேகரிக்கும் இரண்டாம் கட்டம் வந்தது. ஆனால் இந்த விஷயத்தின் விளைவும் தற்காலிகமானது என்பதை நான் உணர்ந்தேன், மதிப்புமிக்க பொருட்களின் மீதான ஈர்ப்பு நீண்ட காலம் நீடிக்காது.

3.பின்னர் பெரிய திட்டங்களைப் பெறுவதற்கான மூன்றாம் கட்டம் வந்தது. நைஜீரியா மற்றும் ஆபிரிக்காவில் 95% டீசல் விநியோகத்தை நான் வைத்திருந்தேன். ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் நான் மிகப்பெரிய கப்பல் உரிமையாளராக இருந்தேன். ஆனால் இங்கே கூட நான் கற்பனை செய்த மகிழ்ச்சி எனக்கு கிடைக்கவே இல்லை.

4. இறுதிக்காலத்தில் தான் யதார்த்தமாக என் நண்பன் அவனுக்கு தெரிந்த பள்ளியில் ஊனமுற்ற குழந்தைகளுக்கு சக்கர நாற்காலி வாங்கி கொடுக்க சொன்னான், சுமார் 200 குழந்தைகள்.

என் நண்பனே கேட்டதற்காக நானும் உடனடியாக சக்கர நாற்காலிகள் வாங்கினேன்.

ஆனால் நண்பனோ நானும் அவனுடன் சென்று சக்கர நாற்காலிகளை குழந்தைகளுக்கு ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தினான். சரி நானும் மனமாறுதலுக்காக அவருடன் சென்றேன்.

அங்கே நான் சக்கர நாற்காலிகளை குழந்தைகளுக்கு என் சொந்த கைகளால் கொடுத்தேன். அப்போது அந்த குழந்தைகளின் முகங்களில் விசித்திரமான பிரகாசத்தை நான் கண்டேன். அவர்கள் அனைவரும் சக்கர நாற்காலிகளில் உட்கார்ந்து, சுற்றி நகர்ந்து வேடிக்கை பார்த்தனர்.

அவர்களின் ஆனந்தத்தை என்னால் விவரிக்கவே முடியவில்லை... அது எனக்குள் ஏதோ சொல்லமுடியாத அற்புதத்தை உணர்ந்தேன். எல்லாம் முடிந்து நான் வெளியேற முடிவு செய்த போது குழந்தைகளில் ஒரு பெண் குழந்தை என் கால்களை மிகசெல்லமாக பிடித்து கொண்டது, நான் சிரித்து கொண்டே என் கால்களை மெதுவாக விடுவிக்க முயன்றேன், ஆனால் குழந்தை என் முகத்தை உற்றுப் பார்த்து கொண்டே விடாமல் இறுக பிடித்து கொண்டது.

நான் குனிந்து குழந்தையிடம் கேட்டேன்: உனக்கு வேறு ஏதாவது வேணுமா?

இந்த குழந்தை எனக்கு அளித்த பதில் மிகுந்த திருப்தியை தந்து வாழ்க்கையைப் பற்றிய எனது அணுகு முறையையும் முற்றிலுமாக மாற்றியது.

அந்த குழந்தை கூறியது இது தான்:

'நான் உங்கள் முகத்தை நினைவில் வைக்க விரும்புகிறேன், உங்களை சொர்க்கத்தில் சந்திக்கும் போது, உங்களுக்காக கடவுளிடம் பேசி நான் உங்களுக்கு பிடித்ததை வாங்கி தருகிறேன் என்று சொல்லி அந்த சக்கர நாற்காலியில் ஏறி மற்ற குழந்தைகளுடன் விளையாட சென்று விட்டது. தெய்வத்தின் அருளை நான் அன்று தான் முழுமையாக உணர்ந்தேன்..



அங்கம்: 04

# வங்கம் தந்த பாடம்

என்னிடம் ஆயுதம் இருந்தது. மக்களிடம் ஒன்றும் இருக்கவில்லை. எமக்கு உதவி செய்தபடியால், அவர்கள் பாக்கிஸ்தானியரின் குண்டுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவர்களது வீடுகள் எரிக்கப்பட்டன. பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். அவர்களுக்கு நாங்கள் எங்கள் நன்றியைத்தான் எப்போதும் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

மார்கழி மாதம் 16ம் திகதி பங்களாதேஷ் இந்திய இராணுவத்தின் கைகளுக்குச் சென்றது. இது ஆச்சரியமூட்டும் ஒரு விடயமல்ல. எமது அரசியல், இராணுவத் தலைமையின் கவலையீனத்தாலும் திறமையின்மையாலும் இடைக்கால அரசாங்கம் ஒரு செயலற்ற சக்தியாக இருந்தது. இது இந்தியரின் தலையீட்டுக்கு வழிவகுத்தது. எமது இராணுவப் படையணிகள் உளரீதியாக பலவீனமானதாகவும், அடிமை மனப்பாங்குடனும் இருந்ததற்கு அவர்கள் இந்தியாவிலிருந்த தளங்களை நம்பியிருந்ததே காரணமாகும். பங்களாதேஷ் மண்ணை அடைந்தவுடன் ஒரு வெற்றிபெற்ற இராணுவத்தைப் போல இந்தியப் படையினர் நடந்து கொண்டனர். தமது கைகளில் அகப்பட்ட எல்லாவற்றையும் அள்ளி எடுத்துக் கொண்டனர். மக்களைச் சூறையாடினார்கள் அவர்கள். முழு அதிகாரத்தையும் தங்கள் கையில் எடுத்துக் கொண்டனர்.

நீதிமன்றத் தலைவரே!! ஏனைய உறுப்பினர்களே.!! இக்கட்டத்தில்,இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளை எதிர்த்த ஒரு அதிகாரியைப் பற்றி நான் இங்கு கூறவேண்டும். இவர் 9வது பிரிவின் தலைவரான மேஜர் எம்.ஏ.ஜலில் ஆவார். அவரும் இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவராவார். ஜலில், தனது நடவடிக்கைக்காக பெரும் கஷ்டப்பட வேண்டியிருந்தது. தனது தேசப்பற்றான கடமைகளைச் செய்ததற்காக கைது செய்யப்பட்டு பலநாட்கள் சிறையில் இருந்தார் அவர். அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், அவர் இளம் புரட்சிவாதிகளின் பிரதிநிதியான ஏ.எஸ்.எம்.அப்துல் ராப் உடன் ( இவரும் இவ்வழக்கில் குற்றச்சாட்டுக்கு உள்ளான இன்னொருவர் ) சேர்ந்து கொண்டார்.



அவருடன்சேர்ந்துபங்களாதேஷின் முக்கிய எதிர்க் கட்சியான J.S.D [ தேசிய சோசலிசக் கட்சி ] யை உருவாக்கி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வைத் தொடக்கி வைத்தார். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 1971 பங்குனி 2ம் திகதி நடைபெற்ற பொட்-டாலா கூட்டத்தில்,முதன் முதலில் எமது தேசியக் கொடியை ஏற்றிய பெருமைக்குரியவர்அப்துல் ராப். இக்கட்டத்தில், மேஜர் ஜலிலை விசாரித்து விடுதலை செய்த நீதிமன்றத்தின் தலைவர் நானே என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் எனது சகோதரர்களைப்பற்றி நான் இக்கட்டத்தில் கூறவேண்டும். விடுதலைப்போர் தொடங்கிய போது, சவுதி அரேபிய விமானப்படையினரைச் சந்திக்கச் சென்ற ஒரு குழுவுடன் எனது அண் ணன் அபு யூசுப்கானும் சென்றிருந்தார். அதனால் போரின்போது அவர் தப்பிவந்து எமது பிரிவில் சேர முடிந்தது. அப்பொழுது அக்குழுவில் பல வங்காளி அதிகாரிகள் இருந்தபோதும் ஒருவர்கூட இப்படிச் செய்யத் துணியவில்லை. அவர்கள் மேற்குப் பாக் கிஸ்தானுக்குத் திரும்பிச் சென்று, பின்பு 1973 இல் பங்களாதேஷுக்கு அனுப்பப்பட்டார்கள்.

ஜமால்பூரில் நடந்த சண்டையில் காட்டிய தீரத் திற்காக என் அண்ணனுக்கு ‘பீர் பிக்கிரம்’ பதக் கம் வழங்கப்பட்டது. 16ம் திகதி மார்கழி மாதம், முதன்முதலில் பாக்கிஸ்தானின் தலைமைப் பீடத்தை அடைந்து ஜெனரல் நியாசியின் சரணைப் பெற்றவர் அவரே. ஜெனரல் நியாசியின் வாகனப் பதக்கத்தை அவர் இன்னமும் வைத்திருக்கிறார். இவரை விடத் திறமையான மனிதர்களை உல கம் குறைவாகவே கொண்டுள்ளதாகத்தான் நான் கருதுகிறேன்.

எனது இன்னுமொரு சகோதரன் அன்வரும் இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். அவர் டாக்கா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர். விடுதலைப் போரில் 11ம் பிரிவின் தலைமை நிலையத்தில் அவர் ஒரு அதிகாரி. அவர் தனது இரண்டாவது போர்வையை ஒரு விடுதலை வீரனுக்கோ அல்லது ஒரு அகதிக்கோ கொடுக் கக்கூடிய இளகிய தன்மையுடையவர். எனது சகோதரனான பாகார் [ Bahar ] பற்றி நான் கூற வேண்டும். இவரும் வேறு மூன்று இளைஞர்களும் இன்றைய அரசின் சதியினால் கொல்லப்பட்டனர். அவர் 200இளைஞர்களைத் தலைமை தாங்கினார். அவர்கள் கார்த்திகை மாதமளவில் நடந்த விடுத லைப் போரில் றெக்கோரானாபகுதியை விடுவித் தனர். அவரது தீரத்துக்காக அவருக்கு இருமுறை ‘பீர் பரதிக்’ பதக்கம் வழங்கப்பட்டது. அவரும் ஒரு தேசிய வீரனாவார்.

எனது இன்னொரு சகோதரனான பீலால் [ Belal ] இன்னுமொரு குற்றஞ் சாட்டப்பட்டவராவார். இவரும் இவரது தீரத்திற்காக இருமுறைகள் ‘பீர் பரதிக்’ பதக்கங்கள் பெற்றவர். ஆறு சகோ தரர்களும் இருசகோதரிகளுமாக முழுமையாக யாவரும் விடுதலைப் போரிற் பங்குபற்றினோம்.



எனது பங்கிற்காக நான் ‘பீர் உத்திரம்’ பதக்கம் வழங்கப்பெற்றேன். எங்களது பங்களிப்பிற்காக எங்களில் நால்வர் இராணுவப் பதக்கங்கள் வழங் கப் பெற்றோம். இவையெல்லாம் சரித்திரத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஏடுகளாகும். விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றியதற்காக, எமது கிரா மம் எரித்து நாசமாக்கப்பட்டது. பாக்கிஸ்தான் இராணுவத்தினர் எனது தந்தையைக் கைது செய்து கொடுமைப் படுத்தினர். எனினும், பாக்கிஸ்தான் அதிகாரியாகிய பிரிகேடியர் காடிர் தலையிட்டு எனது தந்தையை விடுவித்ததற்கு நான் நன்றி செலுத்த வேண்டும்.

இந்திய இராணுவம் வாபஸ் பெற்றபின்னர், ஷேக் முஜிபுர் ரகுமான் திரும்பிவந்து, தேசிய புனரமைப்பு வேலைக்கு முதலிடம் கொடுக்கப்படும் என வும்,ஒரு நீதியான சமுதாயம் அமைக்கப்படும் எனவும் நாம் எதிர் பார்த்தோம். சுரண்டலும் ஊழலுமற் ற,வளர்ச்சியடைந்த சுயாதீனமான பங்களாதேஷ் உருவாகுமென எதிர் பார்த்தோம். எமது இராணுவம் கூலிப் படைபோல அல்லாது, மக்களையும் நாட்டையும் காக்கும் படைபோல இயங்கும் என எதிர்பார்த்தோம். எமது இராணுவம் எமது உற்பத்தி அமைப்பின் ஒரு பகுதியாக இருக் குமென எதிர்பார்த்தோம். இந்த நம்பிக்கைகளிலே எமது இலட்சியங் களும் வெளியாகின. ஆனால், இந்த நம்பிக்கைகள் ஒருபொழுதும் நிறை வேறவில்லை. ஒவ்வொருவரும் இதை உணர்வதற்கு முன்பே அழிவு தொடங்கிவிட்டது.

சித்திரை 1972 இல் எனது காலை வெட்டிய பின்னான மருத்துவ சிகிச்சையின் பின்னர் நான் நாடு திரும்பினேன். பங்களாதேஷ் இரா ணுவத்தில் ஒழுங்கும் பொறுப்பும் மிக்க ஜெனரலாக நான் மீண்டும் சேர்ந்தேன். இராணுவத்தில் மிகவும் சிரமப்பட்டு ஒழுங்கையும் கட்டுப் பாட்டையும் நான் நிலைநாட்டி னேன். சில தவறான நடத்தைகளுக் காக உயர் இராணுவ அதிகாரிகளான பிரிகேடியர் மா.சவுகாத், மேஜர் ஜெனரல் சவியுல்லா ஆகியோ ருக்கு எதிராக நான் ஒழுங்கு நட வடிக்கைகளை மேற்கொண்டது இந்த நீதிமன்றத்தின் தலைவருக் குத் தெரியும். தவறான முறையில் பணம், சொத்து, உடைமைபெற்ற தாக அவர்களுக்கெதிராக குற்றம் சுமத்தப்பட்டது. தவறான முறையிற் பெற்ற அனைத்தையும் மீள ஒப் படைத்து, விடுதலைவீரர்களின் முன்னால் அதிகாரிகள் எல்லோரும் வீரமும் நேர்மையும் மிக்கவர்களாகத் தோன்ற வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். சூழ்நிலையானது மிகவும் சிக்கலாகவே இருந்தது.

நான் ஒருபொழுதும் இக் கொள் கைகளை விட்டுக் கொடுக்கவில் லை. சில மாதங்களுக்குள், 44 வது படைப்பிரிவின் தளபதியாக நான் கொமிலாவுக்கு அனுப்பப் பட்டேன். அங்கு பொறுப்பெடுத்த உடனேயே, தவறான முறையிற் பெற்றுக் கொண்ட யாவற்றையும் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என நான் எனது அதிகாரிகளுக்கு அறி வுறுத்தினேன். எனது அதிகாரிகள் எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந் தமையால், என்னால் நேர்மையான அதிகாரிகளை உருவாக்கக் கூடிய தாக இருந்தது.

இதையே சரியான தலைமையென நான் கருதுகிறேன். எப்போதும் மனிதர்களிலுள்ள நல்ல குணங்க ளையே நான் வேண்டுகிறேன்.



ஒரு மனிதன் அல்லது நாட்டின் குறைபாடுகளை யாரும் பயன்படுத்துவதை நான் அடியோடு வெறுக்கிறேன்.

விடுதலைப் போராட்டத்தின், டாக்கா, கொமில்லா படைப்பிரிவுகளிலிருந்து பெற்ற அனுபவங்களைக் கருத்திற்கொண்டு,நான் முன்பிருந்த உற்பத்தி நோக்கமற்ற, பிரயோசனமற்ற இராணுவத்தைப் போல் அல்லாது ஒரு சிறந்த புரட்சிகர இராணுவத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். நிலையான இராணுவமானது வளர்ச்சியடையும் நாடுகளின் பொருளாதாரத்திற்கு ஒரு சுமையாகும். மேலும், சமுதாய முன்னேற்றத்திற்கும் அது ஒரு பெரிய தடையாகும். தேசிய உற்பத்திக்கு இது எந்தவொரு பங்கும் அளிப்பதில்லை. விடுதலைப் போராட்டத்தின்போது, விடுதலை வீரர்கள் மத்தியில் நான் பார்த்த உற்சாகம், தியாக மனப்பான்மை போன்ற நற்குணங்களிலிருந்து விடுதலையடைந்த பங்களாதேசின் உற்பத்தி நோக்கமுடைய புரட்சிகர மக்கள் இராணுவத்தை அமைப்பது கடினமல்ல என நான் எண்ணினேன். இந்தக் கருத்து எனக்கு மிகவும் உற்சாகத்தைத் தந்தது.

கொமில்லாப் படைப்பிரிவில் மக்கள் இராணுவத்தின் அடிப்படையில் இராணுவத்தை உருவாக்க நான் எடுத்த முயற்சிகளை இராணுவத்தின் ஏனைய பிரிவுகளும் அறிந்திருந்தனர். விடுதலைக்காகப் போராடியவர்களை மையமாகக் கொண்டு ஒரு பலம் வாய்ந்த இராணுவத்தை உருவாக்க முயற்சித்தேன் நான். உற்பத்தி இராணுவம்தான் எமது அமைப்பின் கருத்தாக இருந்தது. இங்கு அதிகாரிகளும், போர் வீரர்களும், விவசாயிகளும் தொழிலாளிகள் போல வேலை செய்தார்கள். நாம் எமது நிலங்களை உழுதோம். எமது உணவை நாமே உற்பத்தி செய்தோம். கிராமங்கள் தோறும் உற்பத்தியில் ஈடுபட்டோம். இதுதான் சுயாதீன நிலைக்கு மாறும் வழியாகும். மிகவும் சிறியதான இப்பிரிவை ஒரு உற்பத்தி சாதனமாக மாற்றியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.

ஆனால், விரைவிலேயே வேறுபாடுகள் ஆரம்பிக்கத் தொடங்கின. ஒரு பக்கத்தில், மக்கள் இராணுவத்தின் வளர்ச்சியைப் புறக்கணித்து, ‘ராக்கி பகினி’ என்ற கூலிப்படையை உருவாக்கியது முஜிப் அரசு. இந்தக் கூலிப்படை உருவாக்கத்தில் இந்திய அதிகாரிகளும் ஆலோசகர்களும் பெரும்பங்கு வகித்தனர். எனது எதிர்ப்பை சம்பந்தப்பட்ட நபர்களுக்குக் காட்டினேன் நான். அத்துடன், போரின்போது இந்தியாவுடன் கைச்சாத்திட்ட இரகசிய உடன்படிக்கை பற்றிய எனது கண்டனத்தையும் நான் பிரதமரிடம் தெரிவித்தேன். இந்திய ஆதிக்கத்தில் இருந்து நாம் விடுதலை பெற வேண்டிய தேவையையும் நான் உணர்த்தினேன்.

இராணுவத் தலைமை முகாமில் எனது எதிர்ப்பைப் பற்றிய ஆதாரங்கள் இன்னும் உள்ளன. இந்தியாவின் இவ்விரு கருத்துக்களிலும் காலனித்துவ முறையிருந்தது. இது மாற்றியமைக்கப் படவேண்டும் என்று நான் வற்புறுத்தியிருந்தும், அரசுக்குள் வேறுபாடுகள் உருவாகின. அரசுக்கும் லெப்டினன்ட் கேர்ணல் சியாவுதீனுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. இதன்



காரணமாக நானும் சியாவுதீனும் இராணுவத்திலிருந்து வெளியேறவேண்டி ஏற்பட்டது. இது கார்த்திகை 1972 இல் நடைபெற்றது. நானும் சியாவுதீனும் கூட வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தோம். இதனால் நாங்கள் தனித்தனியான வழியில் செல்ல நேரிட்டது. ஆனாலும், எங்களுக்கிடையில் இருந்த தொடர்புகள் அறுந்து விடவில்லை. எப்போதும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு நிலைமைகள் குறித்த கருத்துகளைப் பரிமாறிக்கொண்டோம்.

1973ம் ஆண்டில் நான் வெள்ளப் பராமரிப்பு நீர்ப்பாசன அமைச்சில் அதிகாரியாகப் பதவியேற்றேன். நான் பதவியேற்ற காலத்தில் இப்பகுதியானது ஊழலாலும் தவறான நடைமுறைகளாலும் ஏற்கனவே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் சொற்ப காலத்துள் இந்த அமைப்பிற்கு மீண்டும் புத்துணர்வு கொடுத்தேன் நான். இதனால் 1974ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து மிகக்கூடிய வருமானம் பெறக்கூடியதாக இருந்தது. காவற்காரனிலிருந்து பொறியியலாளர், பொறுப்பதிகாரி வரை நான் எவ்வாறு நான் இந்த அமைப்பை நிர்வகித்தேன் என விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

15 ஆவணி 1975 வரையும் அவாமிலீக் அரசாங்கம் எவ்வாறு செயற்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். எவ்வாறு சனநாயக அமைப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக அழிக்கப்பட்டன என்பதும், மக்களின் சனநாயக உரிமைகள் எப்படி நசுக்கப்பட்டன என்பதும் எல்லோருக்கும் தெரியும். சுருங்கக்கூறின், எமது இலட்சியங்களும் நோக்கங்களும் ஒன்றன்பின் ஒன்றாக அழிக்கப்பட்டன. சனநாயகம் கேவலமாகப் புதைக்கப்பட்டது. மக்கள் மிதிக்கப்பட்டு, பாசிச சர்வாதிகாரம் மக்கள்மீது சுமத்தப்பட்டது. இந்தியத் தலையீடு பாசிசத்தை ஊக்குவித்தது.

இந்த பாசிச சர்வாதிகாரத்திற்கு எதிராக வெகுஜன எதிர்ப்பு இயக்கம் உருவானது. இந்த நாட்டை உருவாக்கியவர்களில் ஒருவரான ஷேக் முஜிப் ஒரு சர்வாதிகாரியாக மாறியது மிகவும் மனவருத்தமான விடயமாகும். முஜிப் தனது அரசியற் போராட்டத்தில் எப்போதுமே சர்வாதிகாரத்தை எதிர்த்தவர். அவரே சனநாயகத்தினதும் தேசிய விடுதலை இயக்கத்தினதும் சின்னமாக இருந்தவர். எவ்வளவு குறைபாடுகள் இருந்தும் மக்களுடன் நேரடியாகத் தொடர்பில் இருந்த ஒரேயொரு தலைவர் அவரே. மக்களும் அவரைத் தலைவராக அங்கீகரித்தனர். அவரை ஒரு தீரனாகவும் வீரனாகவும் மக்கள் கருதினார்கள். முஜிப் எப்படி இருக்கவேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்தார்களோ அவர்கள் பார்வையில் அவ்வாறே முஜிப் இருந்தார். எமது விடுதலைப் போரில் முஜிப் பெயரே போர்க்குரலாக இருந்தது. ஷேக் முஜிப் மக்களின் தலைவர். மக்களே அவரின் நிலையைத் தீர்மானித்திருக்க வேண்டும். இதனால், தம்மை ஏமாற்றிய காரணத்திற்காக சரியான வழியில் புரட்சி செய்து,மக்கள் தான் முஜிப்பை வீழ்த்தியிருக்க வேண்டும். முஜிப்பை தலைவராக்கிய அதே மக்கள் சர்வாதிகாரி முஜிப்பையும்அறிந்திருப்பார்கள் என நான் நிச்சயமாக நம்புகிறேன். சதி செய்யவோ ஆட்சியைக் கவிழ்க்கவோ மக்கள் யாருக்கும் அதிகாரம் வழங்கவில்லை.

-தொடரும்....



மாலினி மோகன்

# இன்னல்கள் இன்னமும் தீரவில்லை!!

21 நூற்றாண்டுகள் கடந்தும்
இன்னும் தீரவில்லை
இலங்கை நாட்டின்
இன்னல்கள்...!

எப்புறமும் ஏதோ ஒரு குறை
எம்மை எட்டிபார்க்கவே
செய்கிறது...!
மலையகத்தில்
மட்டுமேதான் குறைகள்
எம்மை குரல் கொண்டு
அழைக்கிறது...!

இயற்கை எழில்
கொஞ்சும் இடத்தில்
இன்னும் மக்கள்
இயல்பாய் ஏனோ
துயில் கொள்ளவில்லை...!
இயற்கை அனர்த்தங்களில்
உயிர்களை உடமைகளை
இழந்து தவிப்பதால் தானோ..?

கலைகள் எல்லாம்
பிறப்பெடுத்த மண்ணில்
மனிதம் இன்னும்
மகிழ்ச்சியில் இல்லை...!

படிப்புக்கு பாடசாலை
பக்கம் இல்லை..!
பாடுப்பட்டு பட்டம் பெற்றாலும்
பொருத்தமான வேலை
இல்லை...!

கூலி வேலைக்கு உயிர்
கொடுத்தும்.
குடும்ப ஆசைகள்
மெய்ப்பட வில்லை...!
பயணம் செய்ய
பாதைகள் இல்லை...!
இருக்கும் பாதைகளோ
எங்கள் ஊருக்குள் இல்லை...!
பட்டுதுணி, பஞ்சு மெத்தை
என்றுமே
எம் வசம் இல்லை...!

குடிக்கும் தண்ணீருக்கோ
குறை இன்னும் ஓய வில்லை..!
மின்சார ஒளியில்தான்
மலையகம்
மொத்தம் மிளிர்வதற்கு
வழியும் இல்லை...!

பசி பட்டினி மாறவில்லை!!
பஞ்சம் பிழைக்க வந்தவர்கள்

வறுமை இன்னும்
மறையவே இல்லை...!
லயங்களின் இடுக்கில்
மலையகம் இறுகி போய்
இன்னும் எழும்பவும் இல்லை...!

வெளிநாடுகளோ
கழிவறைக்குக்கூட
தானியங்கி இயந்திரத்திற்கு
மாறியிருக்க.
மலையகமோ
குடியிருப்பது கூட
இன்னும் குப்பை
கூளங்களோடு....

மலையகத்தையும் சற்று
மார் தட்டி எழுப்பி
உயிரிப்பித்து உதவிடத்தான்
இறைவனின் உதவிக்கரங்கள்
இறங்கி வந்திடுமோ...?

இல்லை இரக்கம் இன்றி
இப்படியே உயிர்களை
எடுத்திடுமோ...?
உணர்வின்றி உணர்வுகளை
உள்ளே எரித்திடுமோ...??



> சுடச்சுடச் செய்திகள் என்ற பெயரில் எத்தனையோ திரிபடைந்த செய்திகளை போட்டி போட்டுக்கொண்டு சில ஊடகங்கள் வெளிவிடுவதையும் பார்க்க முடிகிறது. தவறான இந்த நடவடிக்கைகள் எத்தனை பேரைப் பாதிக்கும்? ஊடகத்துறையில் உள்ளவர்கள் இத்தவறுகள் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

# ஊடகங்களின் இன்றைய வளர்ச்சி

பவானி

மனித நாகரீக வளர்ச்சியில் தகவல்களை விரைவாகப் பகிர்ந்து கொள்ள ஊடகங்கள் உருவாகின. இரு வேறுபட்ட தரப்புகளுக்கிடையே தகவல்களை பரிமாறிக்கொள்ளவே ஊடகங்கள்பயன்படுத்தப் படுகின்றன.

நவீன தொழில்நுட்ப வசதிகளின் படி, உலகம் சுருண்டு நம் கைகளில் இன்று காணப்படுகிறது.தனிமைப்படுத்தப்பட்ட சமுதாயம் இன்று தொழில்நுட்ப ஊடக வசதியால் மெருகேறிஉடனுக்குடன் உலக நடப்புகளைப் பற்றிஅறிய முடிகிறது என்றால், அப் பெருமை ஊடகங்களையே சாரும்.இது மிகையில்லை.

முன்னொரு காலத்தில் நாட்டின் தலைவர்கள் இன்னொரு நாட்டிற்கு சேதி சொல்ல புறாக்கள்,மனிதனை [தூதுவன்] அனுப்பினார்கள்.நாட்டு மக்களுக்கு செய்தி சொல்ல நேரும்போதெல்லாம் முரசறிவித்து மக்களை ஓரிடத்தில் திரட்டி, பின்னர் செய்தி சொல்வர். பிற்கால நாகரீக வளர்ச்சியின்மாற்றத்தில் தபால்,பத்திரிகைகள்தோன்றி ஊடகத்துறை உருவானது.இன்றும்பத்திரிகை வாசிப்பதை சிலர் தம் முக்கிய பணியாக மேற்கொள்கின்றனர்.

அறிவியல், விஞ்ஞான வளர்ச்சியானது காலப் போக்கில் பல ஊடகங்கள் உருவாகக் காரணமாயின. ஊடகங்கள் மக்களுக்கு பல தகவல்களை கொண்டுசெல்கின்றன. அரசியல், உலக நடப்பு, பொருளாதாரம், விளையாட்டு, அறிவியல்,பல்சுவை நிகழ்வுகள், பாடல்கள் என பலவகையான விடயங்களை உடனுக்குடன் அறிய ஊடகம் மிகப்பெரிய உதவியாகவிருக்கிறது. ஊடக மூலம் நவீன உலகின் பல்வேறுபட்ட கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் போன்றவற்றை இருந்த இடத்திலிருந்தே அதிகளவில் அறிய முடிகிறது.

உலகின்எந்தமூலையில்ஒருநிகழ்வு நடந்தாலும், அதனை உடனேயே உலகுதெரிந்துகொள்ளும் அளவுக்கு தொழில் நுட்பம் விரைவு வளர்ச்சி கண்டுள்ளது.மாணவ சமுதாயம் புது புதுத் தகவல்களைஅறிந்து தம் அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ள முடிகிறது. நீண்ட தூரங்களில் இருக்கின்ற உறவினர்கள், நண்பர்களுடன்






> ஊடகங்களையும் தாண்டி அதை விஞ்சும ளவுக்கு சமூக வலைத்தளங்களை மக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர், பயன்படுத்து கின்றனர். இது ஊடகத்துறையின் பரிணாம வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது. பெருந்தொற்றுக் காலத்தில் சமூக வலைத்தள வசதிகளும் இல்லாதிருந்தால் எங்கள் குழந்தைகளின் கல்வி என்னவாக இருக்கும்?

விரைவாக தொடர்பு கொள்ள இந்தஊடகங்கள் உதவு கின்றன. இது மட்டுமல்லாது, ஊடகப் போட்டியானது ஊடகத்தை மேன்மேலும் வளர்த்துச் செல்கிறது.

அத்துடன் கொரோனா பெருந்தொற்று காலத்தில், வீட்டிலிருந்தபடியே அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

ஆளையாள் பார்த்துப் பேசவியலாமல் இருந்த அந்த நேரத்தில் எத்தனை பேரின் மன உளைச்சலுக்கு ஊடகம் ஒரு அருமருந்தாக இருந்தது? நொடிக்கு நொடி மாறும் தொழில் நுட்பவசதிகளினால்,வெகுசன ஊடகங்களையும் தாண்டி அதை விஞ்சுமளவுக்கு சமூக வலைத்தளங்களை மக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர், பயன்படுத்துகின்றனர். இது ஊடகத் துறையின் பரிணாம வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது. பெருந்தொற்றுக் காலத்தில் சமூக வலைத்தள வசதிக ளும் இல்லாதிருந்தால் எங்கள் குழந்தைகளின் கல்வி என்னவாகியிருக்கும்?

இப்போது சாதகங்களை விட இவற்றால் எழும் பாத கங்களை எண்ணி மன உளைச்சலுக்கு உள்ளாகாத




பெற்றோரே இல்லையெனலாம். சமூகத்தில் சின்னத்திரையேகதியெ னக் கிடப்போரும் இருக்கிறார்கள். மக்களைக் கிளர்ச்சியான நிலையில் வைத்திருப்பதற்காக சமூகத்திற்கு




ஒவ்வாத குற்றங்கள் குடும்பங்களி னுள் நிகழ்வதாகக் காட்டும் ஒரு ஊடகத்திற்கு போட்டியாக பிறிதொரு ஊடகம் இன்னுமொரு குற்றத்தைக் காட்டுகின்றது. மாமியார் மருமக ளைக் கொல்லத் திட்டமிடுவதும், மருமகள் சாப்பாட்டில் விசம் கலப் பதும், வாகனத்தால் விபத்து ஏற்படுத் திக் கொல்வதும், கடத்தல், சொத் துச்சண்டை. என்று குற்றப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. எதை நாங்கள் எங்கள் குழந்தைகளுக்கும் இந்த சமுதாயத்திற்கும் சொல்ல வருகிறோம்? எந்த நல்லதை விட்டுச் செல்கிறோம்?

சுடச்சுடச் செய்திகள் என்ற பெயரில் எத்தனையோ திரிபடைந்த செய்தி களை போட்டிபோட்டுக்கொண்டு சில ஊடகங்கள் வெளிவிடுவதை யும்பார்க்க முடிகிறது. தவறான இந்த நடவடிக்கைகள் எத்தனை பேரைப் பாதிக்கும்? ஊடகத்துறையில் உள்ள வர்கள் இத்தவறுகள் நிகழாமல் பார்த் துக்கொள்ளவேண்டும். மக்கள் சரி யானது எது, தவறானது எது என்ற பகுத்தறிவுடன் தாமும் நடந்து, தம் குழந்தைகளையும் வழிநடத்தும் போது ஊடகத்துறையினால் விளை யும் நன்மைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.



# பனை

**பனை மரத்தில் மொத்தம் 34 வகை இருக்கின்றன. அவை,**

1. ஆண் பனை
2. பெண் பனை
3. கூந்தப்பனை
4. தாளிப்பனை
5. குமுதிப்பனை
6.சாற்றுப்பனை
7.ஈச்சம்பனை
8. ஈழப்பனை
9. சீமைப்பனை
10. ஆதம்பனை
11. திப்பிலிப்பனை
12. உடலற்பனை
13. கிச்சிலிப்பனை
14. குடைப்பனை
15. இளம்பனை
16. கூறைப்பனை
17. இடுக்குப்பனை
18. தாதம்பனை
19. காந்தம்பனை
20. பாக்குப்பனை
21. ஈரம்பனை
22. சீனப்பனை
23. குண்டுப்பனை
24. அலாம்பனை
25. கொண்டைப்பனை
26. ஏரிலைப்பனை
27. ஏசறுப்பனை
28. காட்டுப்பனை
29. கதலிப்பனை
30. வலியப்பனை
31. வாதப்பனை
32. அலகுப்பனை
33. நிலப்பனை
34. சனம்பனை

**பனையிலிருந்து பெறப்படும் பயன்கள் : பனை உணவுப் பொருட்கள் :**

1. நுங்கு
2. பனம் பழம்
3. பூரான்
4. பனாட்டு
5. பாணிப்பனாட்டு
6. பனங்காய்
7. பனங்கள்ளு
8. பனஞ்சாராயம்
9. வினாகிரி
10. பதநீர்
11. பனங்கருப்பட்டி
12. பனைவெல்லம்
13. சில்லுக் கருப்பட்டி
14. பனங்கற்கண்டு
15. பனஞ்சீனி
16. பனங்கிழங்கு
17. ஒடியல்
18. ஒடியல் புட்டு
19. ஒடியல் கூழ்
20. புழுக்கொடியல்
21. முதிர்ந்த ஓலை
22. பனை குருத்து

**உணவுப்பொருள் அல்லாதவை :**

★பனை ஓலைச் சுவடிகள்
★ பனை ஓலைத் தொப்பி
★ குருத்தோலை

**வீட்டுப்பயன்பாட்டுப் பொருட்கள் :**

★ பனையோலை
★ நீற்றுப் பெட்டி
★ கடகம்
★ பனைப்பாய்
★ கூரை வேய்தல்
★ வேலியடைத்தல்
★ பனைப்பாய்
★ பாயின் பின்னல்
★ பனையோலைப் பெட்டி

**விவசாயப் பயன்பாட்டுப் பொருட்கள் :**

★ கிணற்றுப் பட்டை
★ ஏர்
★ துலா

**அலங்காரப் பொருட்கள் :**

★ பனம் மட்டை
★ வேலியடைத்தல்
★ நார்ப் பொருட்கள்
★தட்டிகள் பின்னல்

**வேறு பயன்பாடுகள் :**

★ கங்குமட்டை
★ தும்புப் பொருட்கள்
★ விறகு
★மரம்

**கட்டிடப்பொருட்கள் :**

★ தளபாடங்கள்
★ பனம் விதை
★ எரிபொருள்

**கிடைக்கும் பனை உணவுப் பொருட்கள் :**

★ பனங்கருப்பட்டி
★ பனைவெல்லம்
★ சில்லுகருப்பட்டி
★ சுக்கு கருப்பட்டி
★ பனங்கற்கண்டு
★ பனஞ்சக்கரை
★ பனங்கிழங்கு மாவு
★பனங்கிழங்கு சத்துமாவு
★ பதநீர்
★ பனம்பழம் ஜூஸ்
★ பனை விதை
★ பனங்கன்று
★ பனங்கிழங்கு
★ பனைப்பாய்
★ புழுக்கொடியல்
★ ஒடியல்

நாம் ஒவ்வொருவரும் குறைந்தது இரு பனை விதைகளையாவது நடவு செய்தால், வருங்காலம் எப்படி இருக்கும், எவ்வளவு பயன் பெறுவோம் என்று யூகித்துப் பாருங்கள்.





# வனவ்

அங்கம்; 01

**கொற்றவை**

சூரியன் உச்சிக்கு வந்துவிட்டது. தகிக்கும் வெயில். சோளகம் பெயரப்போகிறது என்று சொல்கிறார்களே ஒழிய பெயர்ந்தபாடில்லை. துளி காற்றும் அடிக்காமல் அப்படியே சிலையாய் நின்றன மரங்கள். தாகம் தொண்டையை வரட்டியது. வெயிலும் பசியும் ஒன்றாகச் சேர்ந்து கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது.

‘‘எனக்கே இப்பிடியென்றால் பாவம் அவளும் பிள்ளையும் ஒழுங்கான சாப்பாடு தண்ணிவென்னி இல்லாமல் என்ன செய்வினம்?

இன்றைக்கெண்டாலும் எல்லாருமா ஒண்டா இருந்து நல்ல கறியோட சோறு ஆக்கி சாப்பிடவேணும்.’’ மனதின் அங்கலாய்ப்பிற்கு தடை போட்டது ஐயாவின் குரல்.

‘‘இண்டைக்கு இவ்வளவுந்தான் அந்தக் கயிற்றையும் இறுக்கிக் கட்டிப்போட்டுஇறங்கும்.பிறகு எதுக்கும் தேவைப்பட்டால் சொல்லியனுப்புறன்.’’

இன்றைக்கு,வளவுக்குள் இருந்த ஒரு கொட்டகைக்கு கூரை வேயும் வேலை கிடைத்தது. சின்னக் கொட்டில் என்றபடியால் அரை நேரத்துடன் வேலை முடிந்தது சற்று ஏமாற்றம்தான்.

‘‘சரி! இதுவாவது கிடைத்ததே!’’

கீழே இறங்கி பானையில் வைத்திருந்த தண்ணீரை பக்கத்தில் இருந்த பிளாஸ்ரிக் கப்பால் மொண்டு ஆசை தீரக் குடித்து முடிக்கவும் சுப்பிரமணியம் ஐயா சம்பளத்தை எண்ணிக் கொண்டு வரவும் சரியாக இருந்தது.

‘‘சரி.! போட்டுவாரும்!’’

கேற்றை இழுத்துப் பூட்டிவிட்டு திரும்பி சாத்தி வைத்திருந்த சைக்கிளை எடுத்தான் ஆனந்தன். கட்டியிருந்த சாரத்தின் கீழ்ப்பகுதி சைக்கிள் பெடலில் சிக்கி‘‘டர்ர்ர்’’ எனக் கிழிந்தது.

‘‘அட.! இது ஒண்டுதான் இருக்கிறதுக்குள்ளேயே நல்லது. இதுவும் போச்சுதா.?’’

சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு சைக்கிளை





# வலை

உருட்டத் தொடங்கினான் ஆனந்தன். ஏனோ ஏறி உழக்கத் தோன்றவில்லை. அவனுடைய எண்ணங்களுக்கு பின்னணி வாசிப்பதுபோல ‘‘கிரீச் கிரீச்’’ என்றபடி கூடவந்தது சைக்கிள்.

உச்சி வெயில். ஆள் நடமாட்டம் இல்லாமல் அமைதியாக இருந்தது வீதி. எங்கோ குயில் ஒன்று தனியாகப் பாடிக் கொண்டிருந்தது. இரண்டு அணிற் பிள்ளைகள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு வீதிக்குக் குறுக்கே ஓடின. ஓரத்தில் இருந்த பூவரச மர நிழலில் சற்று இளைப்பாற நின்றான் ஆனந்தன். இலைகளிடையே ஏதோ சலசலத்தது. அண்ணாந்து பார்த்தான். செண்பகம் ஒன்று தன்னுடைய சிவப்புக் கண்களால் அவனை கோபமாக முறைத்துப் பார்த்தது.

செண்பகத்தைப் பார்த்ததும் பழைய, வண்ணமயமான ஞாபகங்கள் கிளர்ந்து எழுந்து ஆனந்தனின் மனதை அலைக்கழித்தன. நெஞ்சே வெடித்துவிடும் போல ஒரு ஏக்கம். செண்பகம் எங்கள் தேசியப் பறவை என்று அறிந்த காலத்திலிருந்து அவற்றின் மேல் ஒரு இனம்புரியாத பற்று ஆனந்தனுக்கு.சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்தான். ஒரு பொறுப்பாளனுக்குரிய மிடுக்கோடு, இதே தெருவில் எத்தனை முறை மோட்டார் சைக்கிளிலும் வாகனங்களிலுமாகப் போய் வந்திருக்கிறான் ஆனந்தன்?

அப்போது, தெரிந்தவர்களைப் பார்த்து ஒரு தலையசைப்பு. அவ்வளவுதான். ஆனால், பிறகு ஒரு தகவல் திரட்டுவதற்காக இந்தப் பிரதேசத்தில் கொஞ்ச நாள் நிற்க வேண்டி வந்தது. எல்லோருடனும் இறங்கிப் பழக வேண்டி வந்தது. ஆனந்தனின் நிதானமும்,மற்றவர்களை மதித்துப் பழகும் பாங்கும், பிரச்சனைகளை அணுகும் முறையும், முக்கியமாக எல்லோருக்கும் பிடித்தமான அந்தப் பெரிய மனிதரிடம் ஆனந்தன் காட்டிய விசுவாசமும் எல்லோருக்கும் பிடித்துப் போயின. சாதிய முறைமையால் துண்டாடப்பட்டிருந்த எங்கள் சமூகம் இந்தச் சமயத்தில்தான்எங்கள் எல்லோரையும் ஒரே விதமாகப் பார்த்தது. இவர்கள் வீட்டிற்குள் வரக்கூடாது என்பதையும், பிறிதான கப்பில் தேத்தண்ணி கொடுக்கும் வழமையையும் மறந்து ஒன்றாகச் சேர்ந்து இருந்த மகிழ்ச்சியான காலங்கள் அவை.

அப்போதுதான் சுப்பிரமணி ஐயாவையும் பழக்கம். எல்லோரையும் போல ஆனந்தனும் சுப்பிரமணியத்தாரை ‘அப்பா’ என்றுதான் சொல்லுவான். அவரும் அதை ஒரு போதும் மறுதலித்ததில்லை அன்பாக இருப்பார்.. இப்போதுதான் நிலைமை எல்லாமே தலைகீழாக மாறிவிட்டதே.. இரண்டு வருடங்களுக்கு முன்பு,வேலை தேடி அலைந்தபோது இதே சுப்பிரமணியம் ஐயா வீட்டில் ஒரு தோட்ட வேலை கிடைத்தது. பழகியவர் வீட்டு வேலை என்பது





# வலை

ஒரு மாதிரியாக இருந்தாலும் வேலை என்று வரும்போது விட்டுவிட முடியுமா? மூன்று வயிறுகள் காத்துக் கிடக் கின்றனவே?

''வசந்தன்...!!'' முன்னையைப் போல் அப்பா எண்டு கூப்பிடாமல் ஐயா எண்டு கூப்பிடுமன் இந்தாளுக்கும் மற்ற வைக்கு முன்ன கொஞ்சம் சங்கடமில்லாமல் இருக்கும்''

நாசூக்காக நாட்டு நிலையைச் சொல்லி ''நீங்கள் இருக்க வேண்டிய இடம் இதுதான்'' என்று உணர்த்தினா இராசமணி அம்மா – சுப்பிரமணியத்தாரின் மனைவி. இதையிட்டு ஆனந்தனுக்கு மனவருத்தம் எதுவுமில்லை. இவற்றையெல்லாம் எதிர்பாராமலா நாட்டைச் சீர்திருத்த இவ்வளவு கஷ்டப்பட்டோம்?

தூரத்தில் வரும் வாகனம் ஒன்றின் இரைச்சல் ஆனந் தனை சுயநினைவுக்குக் கொண்டு வந்தது. கெதியில காசைக் கொண்டுபோனால்தான் அடுத்த நேரச் சாப்பாடு. சுற்றிப் போக நேரம் பிடிக்கும். குறுக்கால விழுந்து குவா ரியடியால போனால் கெதியில போயிடலாம். மேடும் பள்ளமுமாகக் கிடந்த தெருவில் சைக்கிள் ஓடமாட்டேன் என்று அடம் பிடித்தது.

வீட்டில் மனுசி மட்டும்தான் இருந்தாள்.

''சாந்தி! பிள்ளை எங்க? வாற வழியில அரிசியும் மீனும் வேண்டி வந்தனான் சாய் என்ன வெயில்.?''

''பிள்ளைக்கு ஒன்லைன் வகுப்பாம். அவள் கால மையே கலா வீட்டை போட்டாள் இப்ப வந்திடுவள்''

கலாவும் வெண்ணிலாவும் ஒன்றாகப் படிப்ப வர்கள். கலா கடைக்கார டானியலின் மகள். நல்ல மனுசர். இங்கு வீட்டில் இன்ரநெற் இல்லையெண்டு வெண்ணிலாவும் தன்ரை வீட்டில வந்து படிக்க உதவுறார். உண்மையில, கொரோனா காலத்தில படிப்பை இனி என் னண்டு தொடருறது எண்டு ஏங்கி நிற்கேக்க, தன்னட்டை ஒரு பழைய ஃபோன் சும்மா கிடக்கெண்டு தந்துதவினது அவர்தான்.

இளம் பிள்ளையாக இருக்கும்போதே, அவங்கள் வைச்ச கண்ணிவெடியில காலைக் குடுத்தவள் சாந்தி. வயதுபோன தாய் தகப்பனுக்கு ஒரே பிள்ளை. காலில்லாத பிள்ளையைக் கரையேத்துமளவுக்கு பொருளாதார வசதி யும் இல்லை. தவித்துப் போய் நின்ற பெற்றோரிடம் தானாக முன்வந்து, ''நான் கட்டுறன். கவனமா வைச்சுப் பாப்பன்.'' என்ற வசந்தனில் அவர்களுக்கு அப்படியொரு பிடிப்பு. வெண்ணிலா பிறந்து கொஞ்சக் காலத்தில் ஒருவர் பின் ஒருவராக அவர்கள் போய்ச் சேர்ந்து விட்டனர். பிறகு,. நிலைமை வேறுவிதமாக மாறி விட்டது. கடுமையான சண்டை. ஆனந்தன் வீட்டுக்கே போகேல்ல. உக்கிரமான செல்லடிக்குள்ளயும் எப்படியோ வெண்ணிலாவும் சாந்தி யும் பாதுகாப்பாக இருப்பினம் என்ற நம்பிக்கையை வரவ ழைத்துக்கொண்டு முன்னரங்கில் நின்றான்.

எல்லாம் ஓய்ந்தது.. விசாரணை என்று கண்ணைக் கட்டி மற்றவர்களிடமிருந்து பிரித்துக் கூட்டிக்கொண்டு போனார்கள். அடி, உதை, கடுமையான சித்திரவதைகள் என்று வருடங்கள் இருட்டறைக்குள்ளே கழிந்தன.

''கடைசியா அவரை உயிரோட கண்டனாங்கள்''

யாரோ சொன்னதை வைத்துக்கொண்டு, கையில குழந்தையோட சாந்தி எல்லா முகாமுகளுக்கும் வருசக் கணக்கா ஏறி இறங்கியிருக்கிறாள். ஒருத்தரும் சரியான பதில் கொடுக்கேல்லை. காலுமில்லை. கையில குழந்தை.

ஆதரவுக்கெண்டும் ஒருத்தருமில்லை. அந்த நேரம்



சாந்தி பட்ட பாட்டை இப்ப நினைச்சாலும் ஆனந்தனுக்கு இரத்தக் கண்ணீர் வரும். இனித் திரும்பி வருவினம் என்றது சாத்தியமில்லை என்று எல்லோரும் நம்பியிருந்த நேரத்தில்தான், இரண்டு வருசங்களுக்கு முன் ஆனந்தனைத் திறந்து விட்டாங்கள் கம்பீரமான ஒரு வீரனாகப் போனவன் வெறும் கோதாகத்தான் திரும்பி வந்திருக்கிறான். மனிசி, பிள்ளையைக் கண்டு பிடிச்சு வந்த பிறகும் தனக்கு நடந்த எதையும் அவன் வீட்டில சொல்லேல்ல. தாங்க மாட்டினம்.. மகளுடனும் மனைவியுடனும் சேர்ந்திராமல் தொலைந்துபோன வருடங்களை ஈடு கட்டுமாப்போல் நல்ல அன்பாக இருக்கிறார்கள் அவர்கள்.

‘‘இந்தா.. பிள்ளை வந்திட்டாள்.’’

வெண்ணிலா வந்தாள். முகத்தில் மலர்ச்சியில்லை.

‘‘வகுப்பு எப்பிடிப் போச்சு? என்ன பாடம்? விளங்காததைக் கேட்டனியே..?’’

கேள்விக் கணைகள்.

‘‘ம்.. ஆனா, எனக்கு வகுப்பில்லை எண்டு சேர் சொல்லீட்டார்..’’

‘‘அப்ப பேந்து ஏன் நிண்டனீ?.’’ ‘‘வந்திருக்கலாமே’’

ஒரு சிறிய தயக்கம். ‘‘இல்லை கலாக்குத்தான் தனிய வகுப்பு நான் விறாந்தையில இருந்து கணக்குச் செய்தனான்.’’

‘‘கலா.?’’

மீண்டும் ஒரு கணநேரத் தயக்கம் ‘‘அவ ரூமுக்குள்ள போட்டா..’’

ஆனந்தனுக்கு உடனேயே என்னவோ தப்பாகப் பட்டது.

‘‘தனியவும் வகுப்பு எடுப்பினமோ?’’

சந்தேகத்துடன் ஆனந்தன் கேட்ட கேள்விக்கு சாந்தியிடமிருந்து பதில் வந்தது.

‘‘ படிப்பில கொஞ்சம் குறைஞ்சிட்டா தனிய எடுப்பினமாக்கும். அதிலயும் கலா வீட்டில செல்லம். தாய் தேப்பனும் ஸ்பெசலா கவனிக்கச் சொல்லி சேரட்டை சொல்லிச்சினமோ என்னவோ.. ’’

சாந்திக்கு சூதுவாது விளங்காது. வெண்ணிலா தகப்பனை நேராகப் பார்க்காததும் உறுத்தியது. இது என்ன புதுச் சோதனை...? மனதில் எழுந்த ஏதோவொரு இனம் புரியாத குழப்பம் ஆனந்தனின் கொஞ்சநஞ்ச நிம்மதியையும் தொலைத்தது.

கடந்த காலம் தந்த பட்டறிவு உடனடியாக இதை ஆராய்ந்து பார்க்கச் சொல்லியது. தகப்பனிடமோ தாயிடமோ கேட்கலாமோ? எப்படி விசாரிப்பது? பெம்பிளைப் பிள்ளை விவகாரம். தப்பாக எடுத்துவிட்டால்? தவிரவும் அவன் இப்போது வசந்தனில்லையே. ஆசிரியர் யார் என்பதை மகளிடம் கேட்டு அவரைப்பற்றி கட்டாயம் ஒருக்கா விசாரிச்சு அறிய வேணும் என்று முடிவெடுத்தான் ஆனந்தன்.

‘‘பிள்ளையையும் கொஞ்சம் அவதானமாப் பாக்கோணும்...’’

இன்று இனி வேலையேதும் கிடைக்காது. குடும்பத்துடன் பொழுதைக் கழிக்க வேண்டியதுதான். பொழுது சாயும் நேரம். யாரோ அவர்களின் வீட்டுப்பக்கமாக அவசர அவசரமாக நடந்து வருவது தெரிந்தது. ■

தொடரும்...











# நல்லூரில் சிறுவர்களின் பக்தி பரவசம்...



